www.tamilarangam.net

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை □ இதழ் 9 □ யூலை 15 - செப்ரம்பர் 15 2002 □ ISSN 1471 - 8770 □ £1.25, EUR 2.00

நெடுந்தீவு சுரேஸ்

## வெந்த புண்ணில் அரசியல் ஆட்டம்

என் செல்வராஜா

## வரலாறு தீக்கிரையாகாது

அரசியல் விமர்சனம்
பேராசிரியர் கோபன் மகாதேவா

## சமாதானம் எவ்வழி

யமுனா ராஜேந்திரன்

## கோடம்பாக்கத்தின் பார்வையில் ஈழப் பிரச்சினை




# வன்முறை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை ☐ இதழ் 9 ☐ யூலை 15 - செப்ரம்பர் 15 2002

சமூகம்
**வன்முறை..........................,.................02**

அரசியல் - தமிழ்நாடு
**வெந்த புண்ணில் அரசியல் ஆட்டம்...05**

அரசியல் விமர்சனம்
**சமாதானம் எவ்வழி - ஈழ அரசியல் நிலவரம் ..................................07**

வரலாறு
**மணிபல்லவத் தொண்டைமான் கந்தரோடை முதல் காஞ்சி வரை.............10**

சினிமா அரசியல்
**கோடம்பாக்கத்தின் பார்வையில் ஈழப் பிரச்சினை..............................................12**

அசசியல் சினிமா
**காற்றுக்கென்ன வேலி, நந்தா, கன்னத்தில் முத்தமிட்டாள் இன்னுமொரு பார்வை........16**

சினிமா அரசியல்
**ஈழ நெருப்பில் குளிர்காயும் படைப்பாளிகள்,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,17**

புனர்வாழ்வு
**ஊனமுற்றோர் புனர்வாழ்வு.........................19**


யாழ் நூலக எரிப்பு 21 ஆண்டுகள்
**வரலாறு தீக்கிரையாகாது.........................21**

சட்டம்
**பிரித்தானிய உள்துறை அமைச்சு V தமிழர்தகவல் நடுவம்............................23**

ஆசிரியர் தலையங்கம்...............................01
நினைவுகள்...............................................06
இரகசிய சிநேகம்.......................................15
நூல் வெளியீடு............................................18
நூல் தேட்டம்..............................................24

உங்கள் சந்தாவை புதுப்பித்துக் கொள்ள அல்லது சந்தாவை பெற மறவாதீர்கள். உங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றி. *நிர்வாகம்.*





**ஈழத்தின் மூத்த பத்திரிகையாளரான எஸ் எம் கோபாலரட்ணம் (இடம்) தேசம் ஆதரவில் இடம்பெற்ற இலக்கிய நிகழ்வை குத்து விளக்கேற்றி (வலது) ஆரம்பித்து வைத்தார்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்த அரசியல் பலம் போதாது

இலண்டனில் முதற் தடவையாக அதிக எண்ணிக்கையான தமிழ் கவுன்சிலர்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். அதிலும் குறிப்பாக எலிசா மான் முதற் தடவையாக தெரிவு செய்யப்பட்ட பெண் கவுன்சிலர் என்ற பெருமையைப் பெற்று உள்ளார். தொழிற் கட்சியில் இருந்து போல் சத்தியநேசன் (Newham - Wall End), மனோ தர்மராஜ் (Harrow - Roxbourne), தயா இடக்காடர் (Harrow - Roxeth), மைக்கல் செல்வநாயகம் (Croydon - Broad Green) ஆகிய நால்வரும் லிபிரல் டெமொகிரட் கட்சியில் இருந்து எலிசா மான் (Suthwark - Riverside), எம் யோகநாதன் (Kingston-Upon-Thames - St Marks) ஆகிய இருவருமாக மொத்தம் 6 கவுன்சிலர்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். இவர்களுக்கு தேசம் சார்பில் எமது வாழத்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இதில் போட்டியிட்டு தோல்வி அடைந்த அரசியல் தம்பதிகளான சுரேஸ் கிருஷ்ணபிள்ளை, சுரேஸ் சசிகலா, ஜெயரஞ்சன், எஸ் தயாபரன் ஆகியோர் தோல்வியை தழுவிய போதிலும் அவர்கள் அடுத்து வரும் தேர்தல்களில் தொடர்ந்தும் போட்டியிட்டு உள்ளாட்சி மன்றங்களில் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்.

இலண்டனில் உள்ள 33 உள்ளாட்சி மன்றங்களில் 100,000 வரையான தமிழர்கள் வாழ்கின்றனர். மே 2ல் இந்த 33 உள்ளாட்சி மன்றங்களுக்கும் 1855 உள்ளாட்சி அலுவலர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலில் ஆறு தமிழர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். பல்வேறு வட்டாரங்களில் தமிழர்கள் செறிவாக முடிவைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்த போதும் அவர்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்தத் தவறியதாலும் உள்ளாட்சி மன்ற அரசியலில் ஈடுபடாததாலும் தமது பிரதி நிதித்துவத்தை இழந்து உள்ளனர். இந்தத் தவறு எதிர்வரும் காலங்களில் ஏற்படாமல் இருக்கும் விதத்தில் தமிழர்கள் செயற்பட வேண்டும்.

2006ல் அடுத்த உள்ளாட்சி மன்றத் தேர்தல் வரும்வரை காத்திராமல் அரசியல் ஆர்வம் உடையவர்கள் இப்போது இருந்தே தமது கொள்கைக்கு ஏற்ற அரசியல் கட்சியில் தம்மை இணைத்து உள்ளாட்சி மன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு அடுத்த தேர்தலுக்குத் தயாராக வேண்டும். இப்போது தெரிவு செய்யப்பட்டு உள்ள தமிழ் கவுன்சிலர்கள் இலண்டன் வாழ் தமிழர்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களை உள்ளாட்சி மன்ற அலுவல்களில் ஈடுபடத்தூண்ட வேண்டும். தமிழ் மக்களும் அவர்கள் சார்ந்த அமைப்புகளும் தெரிவு செய்யப்பட்ட கவுன்சிலர்கள் பற்றி குற்றம் குறை கூறுவதை நிறுத்தி அவர்களுடன் இணைந்து வேலை செய்யும் நடைமுறையை பழக்கிக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு தொகுதியிலும் 20 — 60 வரை கவுன்சிலர்கள் உள்ளனர். அவர்களுக்கு மத்தியில் இயங்கும் தனி மனிதராக இருக்கும் தமிழ் கவுன்சிலர் பெரிதாக எதனையும் சாதித்து விட முடியாது. ஆனால் அவருக்கு பக்கபலமாக இன்னும் சிலர் செயற்பட முடிந்தால் அது மிகுந்த பலனை அளிக்கும். தனிப்பட்ட குரோதங்கள் விரோதங்களைத் தவிர்த்து சமூக நோக்கில் சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட வேண்டும். மேலும் ஒரே வட்டாரத்தில் இரு தமிழர்கள் போட்டியிட்டு வாக்குகளைப் பிரிக்கும் செயற்பாடுகளையும் தவிர்க்க வேண்டும். 2006ம் ஆண்டு உள்ளாட்சி மன்றத் தேர்தலில் தமிழ் கவுன்சிலர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க முயற்சிப்போம்.

**தேசம் பத்திரி**

பிரதம ஆசிரியர் - த ஜெயபாலன்

(0044) (0)20 8279 0354

நிர்வாக ஆசிரியர் - என் செல்வராஜா

( நூலகவியலாளர் )

(0044) (0)15 8270 3786

ஆசிரியர் குழு

தொழில்நுட்ப உதவி : எஸ் கௌதமன்

கணணியாக்கம் : ஜெ ஸ்ரீரஜனி

THESAM

P.O.Box 35806, London, E11 3JX, UK

Tel : 079 0985 2418

Fax : 020 8534 0797

thesam97@hotmail.com

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**கடந்த சில ஆண்டுகளாக தமிழர்கள் பங்குபற்றும் இடங்களில் எல்லாம் வன்முறை அன்றாடப் பிரச்சினையாக இருந்தாலும் கிங்ஸ்பரியில் பெப்ரவரி 19ம் திகதி அடித்து, எரியூட்டப்பட்டு கொல்லப்பட்ட சுபேந்தர் ராமச்சந்திரனின் (18) கொலை இலண்டன் ஊடகங்களின் கவனத்தை ஈழத்தமிழர்கள் மீது திருப்பி உள்ளது. இந்தச் சம்பவம் மறக்கப்படுவதற்குள் செல்வராஜா சுரேஸ்குமார் (26) அவரது வீட்டில் வைத்தே ஏப்ரல் 22ல் சுட்டுக் கொல்லப்பட்டார். ஈழத் தமிழ் இளைஞர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் 200க்கும் மேற்பட்ட வன்முறைகளில் ஈடுபட்டதாக கொமான்டர் றிச்சர்ட் பிறயன் மே மாதம் 10ம் திகதி ஸ்கொட்லன்ட்யாட் அலுவலகத்தில் வைத்து தேசத்துக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் குறிப்பிட்டு இருந்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் பதிவு செய்யப்படாமல் நிகழ்ந்த குற்றச் சம்பவங்கள் இதனிலும் அதிகம் என்றும் தெரிவித்தார்.**

# வன்முறை



**த ஜெயபாலன்**



BBC NEWSNIGHT TEAM படப்பிடிப்பாளர், நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு சமிந்தா நகல், ஊடகவியலாளர் பென் கெகன்(வலது)

புலம் பெயர்ந்த மண்ணில் இந்த மிகச் சிறிய எண்ணிக்கையான தமிழ் இளைஞர்களின் சமூக விரோதச் செயல்கள் தமிழ் சமூகத்தின் அன்றாடப் பிரச்சினையாக உள்ளது. பெரும்பாலான தமிழ் மக்கள் பிரித்தானிய சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடந்தபோதும் மிகச் சில இளைஞர்கள் ஒழுங்கமைக்கப்படாத குழுக்களாக இயங்கி மொத்த தமிழ் . சமூகத்தின் நன்மதிப்பையும் பாழடித்து வருவது பெரும்பாலும் அனைவராலுமே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால் ஏன் இவர்கள் இந்த வன்முறைக்கு செல்கிறார்கள்? இதற்கான தீர்வு என்ன? என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் உண்டு.

தமிழ் சமூகத்தின் மத்தியில் வன்முறைகள் அதிகரித்து இருப்பது வெறுமனே தனி நபர்கள் சார்ந்த பிரச்சினை இல்லை. அது ஒரு சமூகப் பிரச்சினையும் கூட. அதனால் தொடர்ந்தும் இந்தப் பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது எந்த வகையிலும் சமூகப் பார்வையாக இருக்காது. மேலும் BBC NEWS NIGHT குழு இந்த வன்முறை பற்றி மே மாதம் 23ம் திகதி இரவு ஒளிபரப்பிய நிகழ்ச்சி ஒரு விவாதத்தை உருவாக்கி உள்ளது. அந்நிகழ்ச்சி விடுதலைப் போராட்டத்தை இங்கு நடைபெறும் வன்முறைகளுடன் இணைத்து விட்டது என்றும் அதில் பங்கு பற்றியவர்கள் தமிழ் சமூகத்தின் நன்மதிப்பை குறைத்து விட்டார்கள் என்றும் ஒரு பகுதியினர் வாதிக்கின்றனர். அந்நிகழ்ச்சி சரியான முறையில் சரியான காலத்தில் ஒளி பரப்பப்பட்டு இந்த வன்முறைக்கான ஒரு தீர்வை ஏற்படுத்த முனைந்து உள்ளதாக மறுசாரார் தெரிவிக்கின்றனர்.

தமிழ் சமூகம் தொடர்ந்தும் இறுக்கமான மூடிய சமூகமாக, வேலி அடைத்து வாழ முடியாது. வேலியைத் தாண்டி வந்து இப்போது ஒரு திறந்த வெளிப்படையான சமூகத்தில் வாழ்கிறோம். கடந்த 10 ஆண்டுகளில் ஏழு கொலைகள் செய்யப்பட்டு உள்ளது. இவை திடீரென ஒரே நாளில் நிகழ வில்லை. இன்று மிகமோசமாக இந்த வன்முறைகள் செல்லும் வரை தமிழ் சமூகம் அதனை மூடி மறைத்து கண்டும் காணாமலும் தமக்குள் மட்டும் கதைத்து விட்டு இருந்து வந்தது. தமிழ் ஊடகங்க ளும், அமைப்புகளும் இந்த வன்முறைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எந்த முயற்சியும்

www.tamilarangam.net



எடுத்ததாகவும் தெரியவில்லை. பறோவுக்கு ஒரு ஆலயம் தோன்றியது. அவை ஆன்மீகத்தை வளர்க்கவும் இல்லை இளைஞர்களுக்கு நம்பிக்கையை ஊட்டவும் இல்லை, மாறாக தமது வங்கிக் கணக்கை மட்டும் பெருக்கி வந்தன. ( ஆலயங்களுக்குப் பின்னால் - அடுத்த தேசம் இதழில் பிரித்தானியாவில் உள்ள ஈழத் தமிழ் ஆலயங்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரை வெளிவர உள்ளது. )

பிரித்தானியாவிலும் ஏனைய புலம்பெயர்ந்த நாடுகளிலும் வன்முறையின் பின்னணியை நோக்கினால் விரும்பியோ விரும்பாமலோ இலங்கையில் நடைபெறும் வன்முறைப் போராட்டம் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இது மறுக்க முடியாத முக்கியமான ஒன்று. இது புலம்பெயர்ந்த சில இளைஞர்கள் மத்தியில் எதிர் விளைவை ஏற்படுத்தி உள்ளது. வன்முறையில் ஈடுபட்டு உள்ள இளைஞர்கள் பெரும்பாலும் தமது இருபதுக்களில் உள்ள புலம்பெயர்ந்தவர்களே. அவர்கள் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்திலும் இளயவர்கள். அவர்களது வயதும் துடிப்பும் வன்முறை மீதும் ஆயுதங்களின் மீதும் அவர்களை கவரச் செய்கிறது.

மேலும் ஆயுதங்கள், வன்முறை, கொலை போன்றன போராட்டத்தின் பெயரால் நியாயப்படுத்தப்பட்டன. புலம்பெயர்ந்த மண்ணிலும் இந்த வன்முறையும் கொலையும் போராட்டத்தின் பெயரால் கொண்டுவரப்பட்டது. பரிஸில் சபாரட்ணம் சபாலிங்கம் (01 மே 1994), ஈழமுரசு ஆசிரியர் கந்தையா கஜேந்திரன் (26 ஒக்ரோபர் 1996), புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் கந்தையா பேரின்பநாதன் (26 ஒக்ரோபர் 1996), சுவிஸில் "உமாமகேஸ்வரனை கொலை செய்ததாக கருதப்பட்ட இளைஞனும் அவரது மனைவியும் கொல்லப்பட்டமை என இந்த கொலைக் கலாச்சாரம் தொடர்ந்தது. இது இன்னமும் ரொறன்ரோ, இலண்டன், பரிஸ் என தெருக் குழுக்களினால் தொடரப்படுகிறது.

இரண்டாவதாக இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் சட்டம் ஒழுங்கு இல்லாவிட்டாலும் பெற்றோரதும் சமூகத்தினதும் கட்டுப்பாடு இருந்தது. தனி மனிதனை கட்டுப்படுத்தும் ஆற்றல் சமூகத்துக்கு இருந்தது. ஆனால் பெற்றோர் உற்றாரை பிரிந்து வரும் வன்முறையில் நாட்டம் கொண்ட சில இளைஞர்கள் இங்கு வந்ததும் கட்டுப்படுத்த யாரும் இன்றி, சில சமயம் கட்டுப்பாடுகள் இருந்தாலும் அதனையும் மீறி காடைத் தனங்களில் ஈடுபடுகிறார்கள்.

இந்த இரண்டு பிரதான காரணங்களுடன் கல்வியாலோ, செய்யும் தொழிலாலோ, வேறு வகையில் தமது சமூகத்தில் அங்கிகாரம் பெறமுடியாத இளைஞர்கள் வன்முறையை அதற்கான ஒரு வழியாக கொள்கின்றனர். தமிழக சினிமா வன்முறையை தனது கதாநாயகனின் மூலம் நியாயப்படுத்துவதும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

சமூகமான வாழ்வையே அனுபவியாத யுத்தத்தின் பக்க விளைபொருளான இந்த தெருக்குழு உறுப்பினர்கள் புரியும் வன்முறைகளை எந்தக் காரணத்திற்காகவும் சகித்துக் கொள்ளவோ நியாயப்படுத்தவோ முடியாதது. ஆத்திரத்தில் சாமிக்கே அடித்து விட்டு கல்லுத்தானே என்று

**2000 ம் ஆண்டு முதல் தமிழ் இளைஞர்கள் மத்தியில் நடந்த பதிவு செய்யப்பட்ட 200க்கும் மேற்பட்ட குற்றச் செயல்களில் சில:**

**ஈஸ்ற்ஹாம் - வெட்டு, குத்து காயங்களுடன் இளைஞர் மருத்துவமனையில். ( 04-00 )**

**சவுத்தோல் - 20 இளைஞர்கள் குழு மோதல் - இரத்த வெள்ளத்தில் இளைஞன். (23-25-05-00)**

**ஹவுன்ஸ்லோ - ஒருவரது மூக்கு வெட்டி துண்டாடப்பட்டது, மற்றயவருக்கு இடுப்பிலும் மார்பிலும் கத்திக்குத்து, மூன்றாமவர் தொண்டையில் இருந்து இடுப்பு வரை வெட்டிக் கிழிக்கப்பட்டார், நான்காமவர் தாக்கப்பட்டு துப்பாக்கியால் சுடப்பட்டார். தீபாவளிக் கொண்டாடத்தில் மனித வேட்டை. ( 04-11-00)**

**எட்மன்டன் - குமார் என்பவர் அவரது வீட்டில் படுக்கையில் கோடாரியால் வெட்டிக் கொல்லப்பட்டார். ( 10-00)**

**வெம்பிளி - நால்வர் கொண்ட குழு தாக்கி மார்பில் குத்தி அரவிந்தன் முத்துக்குமாரசாமியை கொலை செய்தனர். மேலும் நால்வர் படுகாயங்களுக்கு உள்ளாயினர். (17-06-01)**

**வோல்சிங்ஹாம் - 15 - 30 இளைஞர்கள் வாள் பொல்லுகளுடன் மோதியதில் மூவர் படுகாயம் அடைந்தனர். ஒருவர் உயிராபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (15 -07-01)**

**வோல்தம்ஸ்ரோ - கலை நிகழ்ச்சியில் குழு மோதல் ஒருவர் படுகாயமடைந்தார். வீதியில் கலைத்து கலைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. ( 10-01)**

**தென்மேற்கு இலண்டன் - பாலா என்பவர் படுகொலை செய்யப்பட்டார். ( 11-01)**

**கிங்ஸ்பரி - சுபேந்திரன் ராமச்சந்திரன் அடித்து படுகாயப்படுத்தப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டார். (18-02-02)**

**வெம்பிளி - சுரேஸ்குமார் செல்வராஜா அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். (22-04-02)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மீண்டும் பூசைசெய்ய அனுமதிக்கலாம். ஆனால் ஆத்திரத்தில் வெட்டிச் சாய்ப்பதை நாம் எத்தனை நாளைக்கு அனுமதிக்க முடியும். இந்த வன் முறையாளர்கள் களை எடுக்கப்படுவது தமிழ் சமூகத்தின் எதிர்காலத்துக்கு இன்றியமையாதது. எமது சனத்தொகை வீதத்துக்கு அதிகமாக மருத்துவர்களை, பொறியியலாளர்களை, கணக் காளர்களை உருவாக்கிய நாம் இன்று இந்த வன்முறையாளர்கள் உருவாவதற்கும் இடம் அளித்து இருக்கின்றோம். அதற்கான தீர்வில் நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமானது என்கிறார் கவுன்சிலர் போல் சத்தியநேசன்.

தற்போது தமிழ் சமூகத்தில் காணப்படும் பிரச்சினை அடையாளம் காணப்பட்டு உள்ளது. காவல்துறையினரும் அதற்கான தீர்வு நோக்கிய செயற்பாடுகளை முடுக்கி விட்டு உள்ளனர். Pan London Organization என்ற இலண்டனில் உள்ள உள்ளாட்சிமன்ற காவல்துறைப் பிரிவுகளை இணை க்கும் அமைப்பு ஏப்ரல் மாதம் உருவாக்கப்பட்டு உள்ளது. இந்த அமைப்பு தமிழ் சமூகத்துடன் இணைந்து சமூக விரோதிகளை இனம் காணுவது, களை எடுப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளதாக செல்வராஜா சுரேஸ்குமாரது கொலையை விசாரித்து வரும் DCI றிச்சர்ட் பிறிமன் 13 மேயில் தேசத்துக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் கனடா போல் இந்த தெருக்குழுக்களை பயங்கரவாதிகளாக கருதி நடவடிக்கை எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை எனத் தெரிவித்தார்.

தலைநகரில் உள்ள ஸ்கொட்லன்ட்யாட் அலுவலகத்தில் 24 மேயில் நடைபெற்ற செய்தி யாளர்கள் சந்திப்பில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 200க்கும் மேற்பட்ட குற்றச் செயல்களில் ஈழத்தமிழ் இளைஞர் குழுக்கள் ஈடுபட்டதாக வடக்கு இலண்டன் கொமாண்டர் றிச்சர்ட் பிறயன் தெரிவி த்தார். Pan London Organization என்ற கூட்டமை ப்பில் எத்தனை அதிகாரிகள் ஈடுபட்டு உள்ளார்கள் என்பதையோ இன்ரபோலோ அதன் முக்கிய அதிகாரிகளில் ஒருவரான சுந்தரலிங்கமோ இந்த கூட்டு நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள் என்பதையோ, கனடிய பொலிஸாரிடம் இருந்து உதவிகள் பெறப்படுகிறதா என்பதையோ றிச்சர்ட் பிறயன் தெரிவிக்க மறுத்து விட்டார். தேசத்துக்கு அவர் விசேடமாக வழங்கிய பேட்டியில், வன் முறையில் ஈடுபட்டவர்களை களை எடுக்கத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து உள்ளதாகவும் வேண் டியவர்களுடன் தொடர்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்த நடவடிக்கை, இலண்டனின் உள்ளாட்சி மன்ற காவல்துறை பிரிவுகளில் இருந்து பெறப்படும் புலனாய்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என கொமாண்டர் பிறயன் குறிப்பிடுகிறார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இலண்டனில் ஹரோ, வெம்பிளி, ஈலிங், சவுத்தோல், இஸ்லிங்ரன், ஈஸ்ற்ஹாம், குறொய்டன், ரூற்றிங் ஆகியன காவல்துறையின் சிவப்புப் புள்ளி இடப்பட்ட பகுதிகள் என விபரித்தார்.

வன்முறைக்கான தீர்வு பற்றியும் கருத்து வேறுபாடுகள் நிலவவே செய்கிறது. வன்முறையில் சம்பந்தப்பட்ட சில இளைஞர்களை திருப்பி அனுப்புவதன் மூலம் இந்த வன்செயல்களில் ஈடுபடு பவர்களை கட்டுப்படுத்த முடியும் என கவுன்சிலர் போல் சத்தியநேசன் நம்புகின்றார். இப்படி திருப்பி அனுப்பப்படுபவர்கள் தாய் நாட்டைப் பாழடித்து விடுவார்கள் என்ற கருத்தும் சிலரிடையே காணப்படு கிறது. சம்பந்தப்பட்டவர்களை திருப்பி அனுப்புவது மிகையான தண்டனை என்றும் அவர்களுக்கு புனர் வாழ்வு வழங்கப்பட வேண்டும் என்றும் அங்கயற் கண்ணி மற்றும் சிவகுருநாதப்பிள்ளை ஆகியோர் சன்றைஸ் வானொலியில் இடம்பெற்ற கருத்துப் பகிர்வில் குறிப்பிட்டனர். இந்த வன்செய்லகளில் ஈடுபடுபவர்களை அவர்களைச் சுற்றி உள்ள உற்றாரும் உறவினர்களும் தான் திருத்த முற்பட வேண்டும் என்று மற்றுமொருவர் கருத்தை முன்வைத்தார்.

இன்று விரல் விட்டு எண்ணக் கூடிய சில நபர்களால் தமிழ் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள அபகீர்த்தி நீக்கப்பட வேண்டும் என்பதில் இலண்டன் தமிழர்கள் ஆர்வமாய் உள்ளனர். அதனை தமிழ் சமூகமோ, அதன் ஊடகங்களோ தனித்து நின்று சாதிக்க முடியாது என்பது நிருபிக்கப்பட்டு விட்டது. மற்றுமோரு கொலை இடம்பெறும் வரைக்கும் காத்திராமல் துரிதமாக பிரித்தானிய சட்ட திட்டங் களுக்கு அமைய செயற்பட்டு இவற்றுக்கு →





வடக்கு இலண்டன் கொமாண்டர் றிச்சட் பிறயன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





உலகின் தமிழர் தலைநாடே! தமிழ்நாடே!
உமக்கு உலகத் தமிழர் எதிரியாமே!
கால் அடி ஆடையுடுத்தி காலுயர்த்தி
களி நடனமாடிய அம்மை தங்க முதல்வராமே
அவரால் கண்ணகி சிலைக்கும் களங்கமாமே

செந்தமிழ் நாவில் தவழ்ந்திடும் போதும் - கலைஞர்
எம் தமிழ் உறவை அறுத்திட முனைந்தால்
அடுத்த ஆட்சியில் அவர்க்கு இடமுமாமே
உம் உடல் தன்னில் பாண்டிய மன்னன்
குருதி தான் போயிற்று
தமிழின உணர்வுமா போயிற்று
போதும் போதும் வேண்டாம் வேண்டாம்
வெந்த புண்ணில் வேல் பாச்சாதே!



**நெடுந்தீவு சுரேஸ்**

# வெந்த புண்ணில் அரசியல் ஆட்டம்

தமிழக சட்டமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட புலிகள் தலைவர் பிரபாகரனை இந்திய இராணுவத்தை அனுப்பிக் கைது செய்து வர வேண்டும் என்பது ஈழத் தமிழர்களை எல்லாம் கொதிப்படைய வைத்துள்ளது.

ராஜீவ்காந்தி 1991ல் கொல்லப்பட்டார். அதன் பின்னர் தொடர்ந்து 5 வருடங்கள் ஆட்சி புரிந்த அ.தி.மு.க மீண்டும் 2001ல் ஆட்சியைக் கைப்பற்றி 10 மாதங்கள் கடந்துவிட்டது. அ.தி.மு.க இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட இருக்கும் தருணத்தில், பிரபாகரனுடனான பத்திரிகையாளர் மாநாட்டின் பின்னர் இந்தத் தீர்மானத்தை நிறைவேறியுள்ளது.

குஜராத் கலவரம், தீவிர மதவாதப் போக்கு என்பவற்றாலும் ஆந்திரத்து நாயுடு போன்றவர்களின் முறுகல் நிலை, ஆர்.எஸ்.எஸ் போன்றவற்றின் வரம்பு மீறிய செயற்பாடுகள் என்பவற்றாலும் இந்திய தேசியத்தில் தனது செல்வாக்கை இழந்து வருகிறது பி.ஜே.பி. இன்றோ? நாளையோ? என அது தொங்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் சோனியாவை திருப்திப்படுத்தி அத்துடன் தனது தோழி சந்திரிகாவுக்கும் விசுவாசத்தை தெரியப்படுத்தி உள்ளாரோ ஜெயலலிதா. ( ஒரு கல்லில் இரண்டு மாங்காய்)

புலிகளை எதிர்ப்பதன் மூலம் காந்தியின் சீடர்கள் தாங்கள் என (மன்னிக்கவும் ராஜீவ் காந்தியல்ல மகாத்மா காந்தி) இந்தியத் தேசியத்தின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டின் முன்னிலை வாதிகள் தான் என்றும் அவர் காட்ட முனைகிறாரோ என்னவோ?......

தெற்காசியாவின் சொர்க்கம் என வர்ணிக்கப்படும் இலங்கையில் வரவிருக்கும் அமைதி தமிழ்

---

→ ஒரு முடிவு கட்டப்பட வேண்டும். இன்றைய கொலையாளிகளையும் வன்முறையாளர்களையும் உருவாக்கிய பொறுப்பு தமிழ் சமூகத்துக்கும் உண்டு. அன்று தமிழ் இளைஞர்கள் மோதும் போதே அதனை நிறுத்த நடவடிக்கை எடுத்து இருந்தால் இன்று இவ்வளவு வன்முறையாளர்களும் கொலையாளிகளும் உருவாகி இருக்க மாட்டார்கள். பிரச்சினைகளை மூடிமறைத்து நாங்கள் உயர்ந்தவர்கள், பண்பட்டவர்கள் என்று தம்பட்டம் அடிப்பதை முற்போக்காளர்கள் என்று கூறுபவர்களும் தமிழ் அமைப்புகளும் கைவிட்டு விட்டு உருப்படியாக நடைமுறைக்கு சாத்தியமாக எதுவும் செய்ய முடியுமா? என்பது பற்றி சிந்தித்து செயல்பட வேண்டும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டுக்கு வர இருக்கும் சுற்றுலாப் பயணிகளை, முதலீடுகளை ஏன் ஐரோப்பிய நாடுகளில் இருந்து குளிர் காலத்தில் இடம்பெயரும் பறவைகளைக் கூட ஈர்த்துக் கொண்டு விடலாமோ என ஐயப்படுகின் றனரா?. புலிகள் பற்றிய ஈடுபாடும் எதிர்பார்ப்பும் மீண்டும் தமிழகத்தில் ஆர்ப்பரித்து எழவிடாமல் ஆப்பு வைக்க முயற்சிக்கின்றனரோ.



ராஜீவ் - ஜே ஆர் - 1987

எது எப்படியோ! அமைதிப்படையென வந்த காந்தியின் படை இலங்கையில் புரிந்த அராஜகங் கள் 25 வருடங்களில் இலங்கை இராணுவம் செய்ததை இரண்டே வருடங்களில் நிகழ்த்திக் காட்டிய கொடுமை. மனித உடல்களை தெரு நாய்கள் தின்று பசியாற்றிய நிகழ்வுகள், அப்பாவி இளைஞர்களை எல்லாம் துப்பாக்கி தூக்கத்தான் வேண்டுமென்று பெருமாள் துணை கொண்டு இம்சித்த வரலாறு, தந்தையின் முன் மகளை மகனின் முன் தாயை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய எழுத முடியாக் கொடூரம், இவற்றுக்கு எல்லாம் யார் பொறுப்பு.

"உங்கள் அம்மா மட்டும் அம்மா. மற்றவன் அம்மாவெல்லாம் சும்மா" என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? பார்ப்பனீய மேலாதிக்க சிந்தனை கொண்ட ஜெயலலிதா இலங்கையின் வரலாறே சரியாகத் தெரிந்திராத மூர்க்கமுள்ள தன்னடக்கமற்ற அரசியல் வாதி. ஆனால் பச்சைத் தமிழன் தான் என்று ஜம்பம் விடும் கலைஞர் கருணாநிதியும் தனது வழமையான நழுவல் போக்கைக் கடைப்பிடித்தது தான் ஈழத் தமிழர்களை எரிச்சலடைய வைக்கிறது.

தமிழ் நாடே! நீங்கள் இப்போது விளையா டிக் கொண்டிருப்பது தமிழீழ விடுதலைப் புலிகளோடு மட்டுமல்ல, கல்வியே மூலதனம் என வாழ்ந்த அப்பாவி இலங்கை மக்களோடு. மேடுகளிலும் காடுகளிலும் குடிசை அமைத்து நாளையை நினைத்து ஏங்கும் உள்ளங்களோடு. ஓடி ஓடியே இளைத்துவிட்ட இளைஞர்களோடு. சொந்தங்களைப் பிரிந்து திசைக்கொருவராய் வாழும் இதயங்களோடு. உங்கள் குறுகிய நலன்களை ஒருகணம் விடுத்து இலங்கையின் அப்பாவித் தமிழர்களை நினைத்துப் பாருங்கள். கருணை, காருண்ணியம் உங்களிடம் கிடையவே கிடையாது என்றால் இந்தியாவின் மற்றைய மாநிலங்களைப் போல் தயவுசெய்து அமைதியாகவாவது இருந்துவிட்டுப் போங்கள். அதுவே அமைதிக்கு ஏங்கும் தமிழனுக்கும் போதும். நன்றி தமிழ்நாடே!□□□□□□□□□□□□□□□□□□□□

## சிவசிதம்பரத்தின் மறைவு:

தமிழர் கூட்டமைப்பின் தலைவராக அண்மைக் காலத்தில் கடமையாற்றிவந்த பழம்பெரும் அரசியல் வாதி திரு. மு. சிவசிதம்பரத்தின் மறைவு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பெரும் இழப்பே. ஒரு காலம் உபசபாநாயகராகக் கடமையாற்றிப் பாராளு மன்ற அணுகுமுறை, நடவடிக்கைகளில் அனுபவம் பெற்ற திறமைமிக்க பேச்சாளர் இவர். ஞாயிறு (09-06-2002) அன்று அவர் பிறந்த வடதமிழீழத்துக் கரவெட்டியில் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த ப்பட்டது.

அண்மையில் பழைய குரோதங்களை மறந்து புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்றவர். தமிழ் பகுதிகளில் மிதவாதத்தை தீவிர வாதம் ஓரம் கட்டிய நிலையில் எஞ்சியிருந்த கூட்டணித் தலைவர்களில் முக்கியமானவரான சிவசிதம்பரத் தின் மறைவு அக்கட்சியின் அஸ்தமனமாகவும் கருதப்படுகிறது.

# அமரர் சிவா

சிவந்த நிறம். நெடிய தோற்றம். கண்ணாடி உள்ளளே ஒளிரும் கண்கள். உடுப்பிட்டியில் பிறப்பு. சட்டத்தரணியாக உயர்வு. இளமையில் இடதுசாரி அரசியல் ஆர்வம் ஆரம்பம். ஐம்பதுக்களின் இறுதியிலே தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலே தலைவர் ஜி ஜி பொன்னம்பலத்தின் தலைமையில் இணைந்தவர். 1960ம் ஆண்டில் இரு பொதுத் தேர்தல்களிலும் பெற்ற வெற்றியோடு பாராளுமன்றப் பணி ஆரம்பம். 1965 தேர்தல் வெற்றியின் பின் ஐக்கிய தேசியக் கட்சி அரசில் உப சபாநாயகர். 1972ல் தமிழ் கட்சிகளின் ஒன்றுபட்ட இணைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவான போது அந்த ஐக்கியத்தை காப்பதில் முக்கியத்துவம் வகித்தவர். 1977 பொதுத் தேர்தலில் கட்சி ஏற்பாடுகளுக்கு அமைய உடுப்பிட்டி தொகுதியை விட்டு நல்லூர் தொகுதியில் நின்று அதி கூடிய வாக்குகள் பெற்று பாராளுமன்றம் சென்றவர். அன்றைய எதிர்க் கட்சித் தலைவராக விளங்கிய அமிர்தலிங்கத்துக்கு இணைகரமாக உழைத்தவர். 1983இன் பின் இயக்கங்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்க இந்திய மண்ணுக்கு இடம்பெயர்ந்து அயல் நாடுகளை தமிழர் பிரச்சனைக்கு உதவி செய்வதில் அதகமாக உழைத்தவர். இனத்தின் நலனை முன்னிறுத்தி தமிழரசுக் கட்சிப் போராட்டங்களில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

*ப வை ஜெயபாலன்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



08 ஜுன் 2002

# சமாதானம் எவ்வழி ஈழ அரசியல் நிலவரம்



பேராசிரியர்
**கோபன் மகாதேவா**

### இந்தியாவின் இளகிவரும் நிலைப்பாடு:

இந்திய அரசு இலங்கை அரசுக்கும் தமிழர் உரிமைகளுக்கும் சமாதான முயற்சிகள் சம்பந்தமாக ஊக்கம் கொடுத்து வருகிறது. இலங்கைக்குப் புதிய அரசியலமைப்புத் திட்டமொன்றை உருவாக்குவதற்கு உதவ முன்வந்துள்ளது. திருமலையில் இப்போ பாவனையற்று வீணாக்கப்படும் 10 எண்ணைத் தொட்டிகளைக் குத்தகையெடுக்கக் கேட்டு இலங்கையரசுடன் ஒப்பந்தமொன்று தயாரிக்கின்றது. இந்தக் குத்தகை தமிழர் நலனைப் பாதிக்காமலிருப்பதைப் பற்றித் தாய்லாந்தில் ஜுன், ஜுலையில் நடக்கவிருக்கும் பேச்சு வார்த்தைகளில் உறுதியாக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

### இடைக்கால வடகிழக்கு மாகாண அரசாங்க அமைப்பு:

தாய்லந்துப் பேச்சுவார்த்தைகளில் பிரதானமாக மேற்கூறியுள்ள விடயமே இடம்பெறுமெனப் பிரபாகரன் நிருபருக்குத் தெரிவித்த பின் ஜனாதிபதி சந்திரிகா அதே பேச்சுக்களில் தமிழரின் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண்பது சம்பந்தமான பாரிய விடயங்களே பேசப்பட வேண்டும் என்றும் வடகிழக்கு மாகாணத்தின் இடைக்கால அரசாங்கத்தில் புலிகளின் தலைமையோ ஆதிககமோ இடம்பெறுவதைத் தான் விரும்பவில்லை என்றும் இலங்கையுள்ளும் வெளிநாட்டிலும் பிரசாரம் செய்து வருகிறார். மேற்படி உத்தேச அரசாங்கத்துக்கு அண்மையில் தேர்தல்கள் வைக்க நேரிட்டால் அதில் தாம் போட்டியிடப் போவதில்லை என்றும் தங்கள் சார்பில் தமிழர் தேசிய முன்னணியே தமிழர் பெரும்பான்மை அரசியற் கட்சிகளின் கூட்டணியாகப் போட்டியிடும் எனவும் புலிகளின் அரசியல் பிரிவுக்குத் தலைமை தாங்கும் தமிழ்செல்வன் அறிவித்திருக்கிறார். இடைக்கால அரசை இன்று நடைமுறையிலுள்ள அரசியலமைப்பின் கீழேயே சிருஷ்டிக்க முடியும். இதுவே புலிகளின் மேற்படி முடிவுக்கும் அறிக்கைக்கும் காரணி.

எனவே சந்திரிகாவின் பிரசாரத்துக்கும் புலிகளின் முடிவுக்கும் முரண்பாடு வருமெனவோ இடைக்கால அரசாங்கம் பற்றிய எதிரிடை நோக்குகளால் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகள் ரத்துச் செய்யப்படுமெனவோ எதிர்பார்ப்பது யதார்த்தமில்லை.

### புலிகளின் உத்தேசத் தடை நீக்கலும் உலகரீதி நீடிப்பும்:

தமக்கு 1998ம் ஆண்டு இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட தடையை நீக்கினாலேயே தம்மால் சமன்பாட்டுச் சுதந்திரத்துடன் பேச்சு வார்த்தைகளில் பங்கு கொள்ளமுடியும் என விடுதலைப் புலிகள் கண்டிப்பாகத் தெரிவித்து உள்ளனர். இதைக் கவனமாகப் பரிசீலனைசெய்த இலங்கை அரசு புலிகளின் அந்த நிலைப்பாட்டிலுள்ள யதார்த்தத்தை ஏற்றுப் பேச்சுகள் தொடங்குவதற்குப் 10 நாட்களுக்கு முன்னர் அந்தத் தடையை நீக்க ஆயத்தங்கள் செய்கின்றனர்.

எனினும் சென்ற வருடங்களில் ஜனாதிபதி சந்திரிகாவினதும் அவரின் வெளிநாட்டு மந்திரியாக 2001 டிசம்பர் பொதுத் தேர்தல் வரை கடமையாற்றிய லக்ஷ்மன் கதிர்காமரினதும் பிரசாரம் சேர்ந்த நீண்டகால வேண்டுகோள்களை ஏற்றுப் புலிகளின் நிதி சேர்த்தல் முதலிய நடவடிக்கைகளைத் தம் தேசங்களில் தடைசெய்த அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியாவும் ராஜீவ் காந்தியின் கொலையையண்டிப் புலிகளைத் தடை செய்த இந்தியாவும் இலங்கை அரசைப் பின்பற்றித் தடைகளை அண்மைக் காலத்தில் அகற்றும் சாத்தியக் கூறுகள் இப்போது இல்லை. எனினும் தனித் தமிழீழமற்ற வேறொரு ஆட்சி முறையின் கீழ் ஜனநாயகரீதியில் தமிழ்ப்பேசும் மக்களுக்குச் சம உரிமைகளை ஆதரிக்கும் அமெரிக்கா, புலிகள் சமரசப் போக்கையும் பேச்சு வார்த்தைகளையும் நிறுத்தித் திரும்பவும் போரைத் தொடங்கினால் பயங்கரவாதத்தின் பெயரில் அவர்களைக் கண்டிக்க வேண்டி வருமெனப் பயமுறுத்துவதும் தெரிகிறது.

### புரிந்துணர்வு ஒப்பந்த அமுல் நடத்தப் பிரச்சினைகளும் தாமதங்களும்:

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் 2002 பெப்பிரவரி 22ந் திகதி கைச்சாத்திடப்பட்டு அமுலாகிவரும் புரிந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ணர்வு ஒப்பந்தத்தில் சில முக்கிய அம்சங்கள் தாமதமாகி வருகின்றன. இவற்றில் முக்கியமான ஒன்று அரசாங்கப் படைகளால் வடகிழக்கில் பலாத்காரமாக எடுக்கப்பட்ட கோவில்கள் (15 கோவில்களில் படையினர் உள்ளனர்.) பள்ளிக் கூடங்களை விட்டு வெளியேறல். இதுவரை ஐந்து பள்ளிக்கூடங்கள் மட்டுமே தளபாடங்கள், கண்ணி வெடிகள் அகற்றிய உத்தரவாதம் முதலியன இல்லாமல் பாவிக்கப்பட முடியாத நிலையில் வழங்கப்பட்டு உள்ளது. புலிகளின் பிரதிநிதிகள் அரசியல் பிரசார வேலைகளுக்குத் தீவுப்பகுதிக்கு அனுமதிக்கப்படுவதில் கடற்படையினருடன் பிரச்சி னைகள் முழுமையாகத் தீரவில்லை.

கிழக்குக் கடலில் புலிகளின் கலன்கள் கூட்டமாகச் சென்றது, வாகரையில் எரிந்த படகைப் பற்றிய புகார் முதலியவையைக் கண்காணிப்புக்குழு விசாரித்துப் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறவில்லை எனத் தீர்த்திருக்கின்றனர். இன்றுவரை இரு பகுதியினராலும் தமக்குக் கிடைத்த 197 முறைப்பாடுகளில் 58 மட்டும் ஆதாரங்களுடைய நியாயமானவை என்று கணிக்கப்பட்டு அவற்றில் பல ஏற்கெனவே தீர்க்கப்பட்டுள்ளன. மற்றவையைப் பற்றி இரு பகுதியினரும் நடவடிக்கை எடுக்கின்றனர்.

## தமிழீழத்தில் புலிகளின் அரசியல் புனருத்தாரணம்:

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 1.13 இலக்கச் சரத்தின்படி புலிகள் கிளிநொச்சியில் அரசியல் தலைமையகம் அமைத்து வேறு பல பகுதிகளில் அலுவலகங்களை நிறுவி 1995 டிசம்பரின் முன் இருந்த நிலையை ஏற்படுத்தப் புனருத்தாரண வேலைகள் செய்துவருகின்றனர். ஆனால் கிழக்கிலும் தீவுப்பகுதியிலும் அரசாங்கப்படையினரின் ஒத்து ழைப்பு பலத்த கண்காணிப்புடன் தான் கிடைத்து வந்திருக்கிறது. புலிகளின் பழைய, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்றழைக்கப்பட்ட அரசியலைகு (P.F.L.T.) திரும்பவும் அதேயுருவில் புத்துயிர் பெறுமா என்பது சந்தேகத்துக்குரியது.

புலிகளின் தலைவர் பிரபாகரன், ஏப்ரல் 10ல் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டைத் தொடர்ந்து முஸ்லீம் காங்கிரசின் தலைவர் ரவுப் ஹக்கீமையும் மலைநாட்டுத் தலைவர்கள் ஆறுமுகம் தொண்டமானையும் திரு சந்திரசேகரனையும் வன்னிக்கு அழைத்துப் பேசிப் பரஸ்பர பிரச்சினைகளில் இணக் கம் கண்டது புலிகளின் அரசியல் தளத்தையும் வலுவையும் விசாலித்துள்ளது. வட கிழக்கைத் தவிர்ந்த இலங்கைத் தீவின் மற்றைய பகுதிகளுக் குத் தம் அரசியல் நடவடிக்கைகளை உத்தியோகப் பூர்வமாகத் தொடரப் புலிகள் எடுத்த பிரயத்தனங் கள் வெற்றியளிக்கவில்லை. எனினும் டக்கிளஸ் தேவானந்தாவின் EPDP யைத் தவிர மற்றைய இலங்கைத் தமிழ் கட்சிகளும் UNP யின் மந்திரி மகேஸ்வரனும் பாராளுமன்றத்திலும் தென்னிலங்கை யிலும் புலிகளின் பேச்சாளராகவும் ஆதரவாளராக வும் இருப்பது புலிகள் ஜனநாயகமுறையில் இலங் கையின் இரண்டாவது வலுமிக்க அரசியல் கட்சி யாகவும் தமிழீழத்தின் ஏகோபித்த முதன்மைக் கட்சி யாகவும் பரிணமிப்பதை எடுத்துக் காட்டுகின்றது.

## பொதுசனப் போக்குவரத்து அதிகரிப்பும் விலைவாசி இறக்கமும்:

ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டே விட்டது. ஆனால், உரிய காரணங்களுக்காக இரு பகுதியினரின் கட்டுப்பாட்டுப் பரிசோதனை நிலை யங்களையும் தாண்டியே பயணிகளும் பண்டங்களும் செல்ல வேண்டும். ஒரே வாகனத்தில் முழுப் பயணத்தையும் செய்யும் வசதியும், கூடிய சீக்கிரத்தில் சாத்தியமாகும். ஒரு நாளைக்கு எத்தனை பேர் போகலாம் என்னும் கட்டுப்பாடு பின்பற்றப்பட்டேவருகிறது. ஒருசில, போருக்கு உதவக்கூடிய சாமான்களை விட்டு மற்றைய பண்டங்கள் இருபக்கமும் எடுத்துச் செல்லப் படுகின்றன.

பிரயாணச் சிரமமும். செலவும், சாமான் களின் விலையும், கணிசமாகக் குறையத் தொடங்கி விட்டன. உதாரணமாக, புகையிரதம் பொதுசன பஸ்சேவை இவற்றைப் பாவித்து ரூ.500-600க்கும் விசேட வான்களில் ரூ.1500-1600க்கும் விமானத்தில் ரூ.6000த்துக்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போய்வர முடியும். விலைகளைப் பொறுத்தளவில் மே மாதத்தில் ரூ.5000 விற்ற சீமந்துப்பொதி ரூ.650 ஆகவும், ரூ.12,000 விற்ற துவிசக்கரவண்டி ரூ.6,700 ஆகவும் விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளன என இணைய ஊடகம் மூலம் அறியக் கிடைக்கிறது.

## ரணிலின் வெளிநாட்டுப் பிரசாரப் பிரயாணங்கள்:

பிரதமர் ரணில் ஐரோப்பாவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவரைக் கண்டும் பாராளுமன் றத்தில் பேசியும் தனது அரசாங்கத்துக்கும் விடுத லைப் புலிகளுக்கும் இடையே நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைகளுக்கு அவர்களின் ஆசிகளைப் பெற்றபின் இலண்டனில் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் ரோணி பிளெயருடன் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலையைப் பற்றி ஆலோ சனைகள் நடத்தினார். எல்லோரும் ரணிலின் அரசா ங்கத்துக்குத் தம்மாலான பணவுதவியும் பக்கபலமும் கொடுப்பதென வாக்களித்து இருக்கின்றனர்.

அத்துடன் ஜுன்7இல் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துத் தாய்லாந் துப் பேச்சுவார்த்தைகள் பற்றியும் புலிகளின் தடை நீக்கம் பற்றியும் பேசுகிறார். இப்பிரயாணங்கள் எல்லாம் அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட அரசியல் சுற்றுலாவில் தாய்லாந்துப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பேச்சுவார்த்தைகளுக்குப் பாதகமாகப் பிரசாரம் செய்த நாசகார அம்சங்களை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடனேயே தொடரப்பட்டுள்ளன. இலண்டனில் நோர்வேயின் 34 பேரடங்கிய சமாதானக் குழுவின் தலைவராகிய விதார் ஹெல்கிஸனையும் சந்தித்தார். சென்றவாரம் கொழும்பில் வெசாக் பண்டிகை உற்சாகமாகக் கொண்டாடப்பட்டதுக்கும் மேலும் புலிகள்-அரசாங்கம் தொடர்பு முறியாமலிருப்பதற்கும் ரணிலின் அணுகுமுறையே காரணம் எனலாம். எனவே, சந்திரிகாவின் சமாதான நாசகாரச் சக்தியைச் சிறிது சிறிதாகப் பிரதமர் ரணில் வென்று வருவதை உலகமும் காண்கின்றது.

## அரசின் முப்படைகளால் தொடரும் முட்டுக்கட்டைகள்:

அரச படைகளின் இழுத்தடிப்புகளைப் பொறுத்து நடந்து சமாளிப்பதன் மூலம் நோர்வேயின் தூதுவர்கள் இலங்கை அரசின் பக்கம் ஓரவஞ்சனை உடன் நடக்கின்றனரென விடுதலைப்புலிகள் மிக அண்மையில் ஒரு குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்தக் கட்டத்தில் 1994ல் தொடங்கி 1995ல் தொடர்ந்து, கைவிடப்பட்ட சந்திரிகாவின் மக்கள் கூட்டணி (PA) அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைகள் எப்படிக் குழம்பின என்று நினைவுகூரல் பொருந்தும். சந்திரிகா முதல்முறை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது, தமிழரின் பிரச்சினைகளை ஏற்று, ஆதரித்து, விடுதலைப் புலிகள் ஆயுதமேந்தியதற்கு உரிய காரணங்கள் உண்டு, எனவே அவர்களுடன் பேசியே பிரச்சினையைத் தீர்க்கவேண்டும், அதனையே நான் செய்யப் போகிறேன், என்று சொல்லியே ஆட்சிக்கு வந்தார்.

அவர் அனேகமாக அந்நாளில் உள் மனச்சுத்தியுடனேயே அப்படிச் சொல்லியிருக்க வேண்டும். ஆனால், நாட்களும் வாரங்களும் மாதங்களும் செல்லச் செல்ல, அவரின் உப பாதுகாப்பு மந்திரியாகவிருந்த மாமனார் அனுருத்த ரத்வத்தையின் தலைமையிற் செயற்பட்ட இலங்கைப் படைகளே அக்காலத்திலும் பேச்சு வார்த்தைகளை முறியடிக்கக் காரணமாக இருந்தனர். மேலும் வடமாகாணத்தைத் தமிழருக்குக் கொடுக்க டட்லி முதல் தொடக்கம் ஜயவர்தன வரை யாருமே மறுப்புத் தெரிவிக்கவில்லை. இன்றும் நிலை அப்படியே. கிழக்கு மாகாணத்தில் தமிழரின் அரசியல் ஆதிக்கம் பற்றியே, சிங்கள அரசாங்கமும் சிங்கள மக்களும் (ஏன், முஸ்லிம் மக்களும்) சிங்களப் படைகளும் பயப்படுகின்றனர்.



இலங்கைப் பிரதமர் ரனில் விக்கிரமசிங்காவும் பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயரும்.
படம் நியுஸ் லங்கா - நன்றி

இன்றும் படைகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முட்டுக்கட்டைகள் இடுவது பெரும்பாலும் கிழக்கிலேயே. இவற்றை இருசாராரும் நன்குணர்ந்து உரிய நடவடிக்கைகளை உடனே எடுத்தால்தான் பேச்சுவார்த்தைகளும் சமாதானப்போக்கும் இடர்களில்லாமல் செல்லும். எனவே, அரசாங்கம் முப்படைகளைக் கட்டுப்படுத்த, இருசாராரும் கிழக்கையே கவனிக்க வேண்டும்.

## சலசலக்கும் பாராளுமன்றக் கலைப்பு

மார்ச், மே மாத உள் ஊராட்சி தேர்தலில் ஈட்டிய அமோக வெற்றியினால் பிரதமர் ரணில் ஊக்கம் பெற்றுள்ளார். 2002 டிசம்பரில் தனது அரசாங்கத்தின் ஒரு வருடப் பதவி முடிவில் தாமாகவே ராஜிநாமாச் செய்து பொதுத்தேர்தலை அறிவிக்கலாம் என ஒரு செய்தி கசிந்து உள்ளது. இதன் மூலம் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட பெரும்பான்மையான பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுச் சந்திரிகாவை ஓரங்கட்ட முடியும் என ரணில் நம்புகிறார் என்றும் அச்செய்தி கூறுகிறது. பாராளுமன்றத்தைச் சந்திரிகா தானாகக் கலைக்க இடம் கொடுக்காமல், நிரந்திரமான சமாதானத்தை வேகமாகக் கட்டியெழுப்பும் இந்த பொதுத் தேர்தல் திட்ட மொன்றைப்பற்றி ரணில் ஆலோசித்து வருகிறார் என வதந்தியான அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

எனினும் இந்த உத்தேசத் திட்ட நடவடிக்கையின் சாத்தியக்கூறுகளைப் பற்றிச் சந்திரிகாவும் கட்டாயம் கேள்விப்படாமல் இருக்க முடியாது. எனவே சந்திரிகா ரணிலை முந்திப் பாராளுமன்றத்தைக் கலைக்கக்கூடும். அதனால் குழப்பநிலை ஏற்படலாம் என்ற எண்ணத்தில்தான் பிரதமரினதும் பாராளுமன்றச் சபாநாயகரினதும் ஆலோசனையின் பேரில்தான் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கலாம் என்னும் பிரேரணையை இப்பொழுதே கொண்டுவந்து வாக்கெடுப்பு நடத்தவும், இப் பிரேரணையின் சார்பில் வாக்களிக்கும் மக்கள் முன்னணியினரைச் சந்திரிகா தன் கட்சியிலிருந்து வெளியேற்ற முடியாமலாக்க இன்னுமொரு துணைப் பிரேரணையைக் கொண்டுவரவும் பிரதமர் ரணில் அறிவித்தல் கொடுத்து ஆயத்தங்கள் செய்து →



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாறு

## மணிபல்லவத் தொண்டைமான்

# கந்தரோடை முதல் காஞ்சி வரை



Dr எஸ் தியாகராஜா

இன்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்பு மணிபல்லவம் என்ற பெயரால் அழைக்கப்பட்ட பண்டைய யாழ்ப்பாணத்தில் பிறந்த தொண்டைமான் இளந்திரையனே காஞ்சியில் தலைநகர் அமைத்து பல்லவ அரச வம்சாவழியை ஆரம்பித்து வைத்த மன்னன் என்பதை சங்க இலக்கியங்களும் ஈழத்தின் பழைய பாடல்களும் சரித்திரச் சான்றுகளும் எடுத்துரைக்கின்றன.

இம்மன்னனது பெயர் கொண்ட ‘தொண்டைமான் ஆறு‘ இன்றைக்கும் யாழ்ப்பாண மண்ணில் ஓடிக்கொண்டிருக்கின்றது. புராதன யாழ்ப்பாணத்தில் கி.மு 1000 ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகம் அடைந்த மக்கள் கூட்டாக வாழ ஆரம்பித்து விட்டதையும், கி.மு 500ம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாக விளங்கியதையும் இன்றைய அகழ் வாராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களும் அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்ட கருவூலங்களின் ரேடியோ கார்பன் தேதிக் கணிப்புகளும் விஞ்ஞானரீதியாக உறுதிப்படுத்துகின்றன. (1)

### கந்தரோடைஅகழ்வுகளின் கார்பன் - 14 தேதிக் கணிப்புகள் 1977

P - 2515 இலக்கமிடப்பட்ட கருவூலம் கி.மு 1290 +/- 60 ஆம் ஆண்டுக்காலத்தைச் சேர்ந்தது எனவும், P - 2525 இலக்கமிடப்பட்ட கருவூலம் கி.மு 940 - 980 +/- 220 ஆண்டுக்காலத்துக்கு உரியது என்றும் கணிக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தின் தொன்மையை விஞ்ஞான ரீதியாக நெறிப்படுத்தும் ஆதாரம் இது.

இக்காலத்தில் நாகர் என அழைக்கப்படும் புராதன திராவிட இனத்தவரே இந்த மண்ணில் வாழ்ந்தார்கள். மகாவம்சம்(2) குறிப்பிடும் நாகதீபமும், மணிமேகலை(3) நாகநாடு மணிபல்லவம் ஆகிய பெயர்களால் குறிப்பிடும் நாடும் இன்றைய யாழ்ப்பாண மண் என்பதில் எதுவிதமான ஐயப்பாடும் இல்லை.

மணிமேகலை குறிப்பிடும் நாகநாடு, மணி பல்லவம் ஆகிய இடப்பெயர்கள் நயினா தீவைக்

→

இருக்கிறார். அத்துடன் சந்திரிகாவின் அலுவலகத் திலேயே இதுவரை நடந்துவந்த அமைச்சரவைக் கூட்டங்களை மே 15 தொடக்கம் அமைச்சரவையின் அலுவலகத்திலேயே இனிமேல் நடத்துவதென ரணில் செய்த முடிவை ஏற்காது சந்திரிகா மே 29 நடந்த அமைச்சரவைக் கூட்டத்துக்குப் போக மறுத்துள்ளார். இந்த ரணில்-சந்திரிகா போட்டி தமிழரையும் சமாதானத்தையும் பாதிக்கவே செய்யும். எனவே தமிழர் கட்சிகள் மிகவும் சாதுரியமாகவே, பொறுமையுடன் பேசி, அரசியல் நடத்த வேண்டியது மிக அவசியம்.

### பத்திரிகைகளின் பயங்கரவாதம்:


இலங்கையின் இனப்பிரச்சினையை வளர்த் தவர்கள் முக்கியமாகப் பதவிமோகங் கொண்ட சிங்கள, தமிழ், அரசியல்வாதிகள் மட்டுமல்ல, கூடிய அளவில், அவர்களின் அரசியலை ஒன்றுபத்தாகப் பெரிதாக்கி விமர்சித்த சிங்களப் பத்திரிகைகளே எனலாம். சிங்கள அரசாங்கங்களால் தமிழருக் கெதிராக ஏவப்பட்ட அடக்குமுறைப் பயங்கரவா தத்தை எதிர்த்தே தமிழர் ஆயுதமேந்தினர். அதன் பலனாகச் சென்ற 25 ஆண்டுகளாகத் தமிழரும் பொதுவாக எல்லா இலங்கையருமே வெவ்வேறு வகைகளில் வெவ்வேறு அளவுகளில் அனுபவித்து உள்ள துன்பத்தையும் நஷ்டங்களையும் எவரும் என்றும் மறக்கமுடியாது, மறக்கவும்கூடாது. புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று அமுல் நடத்தப்பட்டு 100 நாட்கள் துவக்குகளும் தூங்கிவரும் இந்த முக்கிய கட்டத்தில் தமிழருக்குச் செய்தியறிவிக்கும் கடமையையேற்றுச் செயற்படும் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் தத்தம் விற்பனையைப் பெருக்கும் அவசர அவாவில் திட்டமிட்டோ கவலை யீனமாகவோ நுணாவில், வரணிப்பகுதிகளில் 550 சதுரமைலை உள்ளடக்கி இராணுவமுகாம்கள் உருவாகின்றன என்று, உண்மையை 640 மடங்கு பெருப்பித்ததைப் போன்ற தவறுகளைத் தவிர்ப்பது சமாதானப் போக்குக்கு மிகவும் முக்கியம்.□□□□□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






குறிப்பதாக ஒரு காலத்தில் சில அறிஞர்கள் கருதினார்கள். ஆனால் வல்லிபுரத்தில் கண்டு எடுக்கப்பட்ட பொற்சாசனம்(4) நாகநாடு (நாகதீபம்) என்ற பெயரால் முழு யாழ்ப்பாண நிலப்பரப்பையும் குறிப்பிடுகின்றது.

மேலும் மணிமேகலை விபரிக்கும் பல இடங்களை யாழ்ப்பாணத்தின் வடமேற்குப் பகுதி களில் நாம் இனம் கண்டுகொள்ள முடிகிறது. நாகநாட்டின் தலைநகரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நாகபுரம்(5) இன்றைய கந்தரோடையே என்பதை, அங்கே நடைபெற்ற அகழ்வுகளில் காணப்பட்ட பௌத்த மத சின்னங்களும் நாக நாணயங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

கந்தகோட்டம் என்ற பெயரே காலகதியில் கந்தகோட்டை எனப் பெயர் பெற்று பிற்காலத்தில் கந்தரோடையாக மருவியது என்பதை வரலாற்று ஆசிரியர் சி. எஸ். நவரத்தினம் எடுத்துக்காட்டியுள்ளார்.(6)

மணிமேகலை(7) சொல்லும் புத்த பகவானின் திருப்பாதங்களைக் கொண்ட கோயில் 'திருவடி நிலை' என்ற பெயரால் சமீப காலம் வரை அழைக்கப்பட்டது.

இக்கோயிலுக்கு அருகாமையில் இருப்பதாகச் சொல்லப்படும் துறை முகம்(8) திருவடி நிலைக்கு அருகில் உள்ள சம்புத்துறையாகும். சரித்திர காலத்தில் இத்துறைமுகம் 'சம்பு கோவளம்' என்ற பெயரில் பிரபலமான துறைமுகமாக விளங்கியது. மகா வம்சம் குறிப்பிடும் 'ஜம்புகோள'(9) இச்சம்பு கோவளமே.


ஆய்வுத் துணை நூல்கள்

1. இந்திரகுமார் ரூ தியாகராஜா - ஈழத்தமிழர் வரலாறு, சென்னை 2002, பக்கம் 154
2. Welhelm Geiger (Fransl) : The Mahavamsa, New Delhi 1993 p.6
3. மணிமேகலை : உ.வே.சா பதிப்பு காதை 24 - வரி 54, காதை 25 - வரி 25.
4. paranavitana, S. Vellipuram Gold Plate : Epigraphica Zeylanica Vol V1.
5. மணிமேகலை : காதை 14 வரி 169.
6. Navaratnam C.S : Tamils and Ceylon: Jaffna 1958
7. மணிமேகலை : காதை 25 - வரி 183
8. மணிமேகலை : காதை 25 - வரி 184, 189
9. Mahavamsa (Geiger) : ch x1 -p.79, ch x1x-p.130


**Dr எஸ் தியாகராஜாவின்**

## மணிபல்லவத் தொண்டைமான் கந்தரோடை முதல் காஞ்சி வரை

வரலாற்றுக் கட்டுரை அடுத்து வரும் தேசம் இதழ்களில் தொடரும்.

வரலாறு பற்றி அறிய ஆர்வம் உடையவர்கள் இக்கட்டுரை ஆசியியருடன் தொடர்பு கொள்ள விரும்பினால் தேசம் சஞ்சிகையின் ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## காற்றுக்கென்ன வேலி - நந்தா - கன்னத்தில் முத்தமிட்டால்

# கோடம்பாக்கத்தின் பார்வையில் ஈழப் பிரச்சினை



சினிமா விமர்சகர்
**யமுனா ராஜேந்திரன்**

### காற்றுக்கென்ன வேலி

படத்தில் ரொம்பவும் நேரடியான தெளிவான கதை இருக்கிறது. ஈழத்திலிருந்து ஆயுத மோதலில் காலில் காயம்பட்ட ஒரு போராளிப் பெண் தமிழ் நாட்டுக்கு வந்து தங்கி, சிகிச்சை பெற்று திட்ட மிட்டபடி ஈழத்துக்குத் திரும்பிப் போய்விடுகிறார். அவர் தமிழகத்தில் தங்கியிருக்கும் காலத்தில் நடக்கும் சம்பவங்களின் தொகுப்பாக திரைக்கதை அமைக்கப்பட்டிக்கிறது.

இவ்வகையான அரசியல் தன்மை கொண்ட படம் சரியான வகையில் சொல்லப்பட வேண்டு மானால், இரண்டு விடயங்கள் கறாராகத் தவிர்க்கப்பட வேண்டும். முதலாவதாக படத்தில் வருகிற எல்லா ஆண்கள் பெண்களுக்கும் அவர்களிடையே காதல் இருந்தே தீரவேண்டும் என்கிற, தமிழ் சினிமாப் பார்முலா தவிர்க்கப்படவேண்டும். இரண்டாவதாக வரலாற்று ரீதியிலான அரசியல் முரண்பாடுகளை, நேரடியான சித்திரிப்பில் எதிர்கொள்ள வேண்டும். காத்திரமான அரசியல் முரண்பாடுகளை, தமிழ் சினி-மா உணர்ச்சிவசக் கதை சொல்லலில் தீர்த்துக் கொள்கிற மனோரீதிய மனப்பாங்கு இங்கு தவிர்க் கப்பட வேண்டும்.

துரதிருஷ்டவசமாக இந்த இரண்டு விஷயங் களின் அடிப்படையில்தான் இக்கதை சொல்லப்பட்டு இருக்கிறது. ஆசிரியை, போராளிப் பெண், நர்ஸ் என எல்லோருக்கும் காதல் இருக்கிறது. டாக்டர், போராளிகள் இருவர், என எல்லோருக்கம் காதல் மயக்கம் வருகிறது. இந்திய அமைதிப் படைக்காரர் கண்ணிழந்தவராக வருகிறார். அவர் ஈழப் போராளிப் பெண்ணை நேருக்கு நேர் எதிர்கொள்வதில்லை. ஒரு காத்திரமான அரசியல் ரீதியலான படத்தை, தமிழ்சினிமா உணர்ச்சிவசக் கதை சொல்லல் மூலம் இயக்குனர் புகழேந்தி விரையமாக்கியிருக்கிறார். பாத்திரங்கள் இயல்பாக இயங்காமல் பொம்மைகள் போல இயங்குகிறார்கள். அரசியல் பிரச்சினைகளை மனோரதியமாகத் தீரக்க முற்பட்டால் ஏற்படும் படைப்பு ரீதியிலான அபத்தத்திற்கு ஒரு சான்றாக காற்றுக்கென்ன வேலி படம் இருக்கிறது.

ஆனால், இயக்குனர் புகழேந்தியின் காற்றுக்கென்ன வேலி ஒரு அம்சத்தில் கவனம் கொள்ள வேண்டிய படம். மேற்கில் ஹாலிவுட் சினி மாக்களில் படத்தின் முதலிலிருந்து கடைசி வரைக்கும் எடுத்துக் கொண்ட பிரச்சினையைப் பேசுமாறு கதை அமைகக்பபடடிருக்கும். இடைச் செறுகல்கள், சுற்றிவளைப்புகள், தப்பியோடல்கள் இருக்காது. நகைச்சுவைக் கூத்துகள் இருக்காது இம்மாதிரியில் எடுத்துக் கொண்ட பிரச்சினை, காற்றுக்கென்ன வேலி படத்தில் படத்தின் முதல் காட்சியிலிருந்து இறுதிக்காடசி வரையில் இருக் கிறது. இது தமிழ் சினிமாத் திரைக் கதைகளில் காணமுடியாத ஒரு விஷயம். படத்தில் என்னை மிகவும் ஆகர்ஷித்த இன்னொரு அம்சம் போராளிப் பெண் சார்ந்த ஆரம்ப நிலைக் காட்சிகள் : பழைய பாழடைந்த கோட்டை, மணல்பரப்பு, மதில் சார்ந்து நிகழ்கிற காட்சிகள். கதை நிகழ் காலம், இடம் குறித்த பிரக்ஞையுடன் இயக்குனர் செயல்பட்டிருப்ப தற்கு ஆதாரம் இந்த இடங்களில் நிகழும் காட்சிகள்.



காற்றுக்கென்ன வேலி காட்சியில் போராளி அருண்பாண்டியனுடன் சுஜிதா

தமிழச்சூழலில் இப்படத்திறக்கு நேர்ந்திருக் கும் முக்கியமான விபத்து ஒன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும். நிலவும் தமிழ்ச் சினிமா விநி யோகக் கட்டமைப்பு படத்தின் எந்தவித முக்கியத்துவத்தையும் காயடித்துவிடும் தன்மை கொண்டது என்பதற்கான சான்று இது. இப்படம் தற்போது பெண் பயங்கரவாதி எனும் பெயரில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழகத்தில் வெளியாகவிருப்பதாக் விளம்பரங்கள் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அருண் பாண்டியன் கோபத்தோ:டு துப்பாக்கி பிடித்தபடி நிற்கிறார். பக்கத்தில் போராளிப் பெண்ணும் துப்பாக்கி பிடித்தபடி நிற்கிறார். இது இன்னொரு ஆபாவாணன், ராம்கி, அருண்பாண்டியன் கம்பெனிப் படமல்ல என்பது காற்றுக் கென்ன வேலியை ஏற்கனவே பார்த்தவர்களுக்குத்தான் தெரியும்.

## நந்தா

சேது படத்திற்கான பூர்வாங்க வேலைகளில் ஈடுபட்டிருந்தபோது மண்டபம் ஈழ அகதி முகாமில் ஏற்பட்ட அனுபவங்களில் இருந்து உருவான படம் என நந்தா படத்தைப் பற்றி இயக்குனர் பாலா சொல்லியிருககிறார். பாலா பாலுமகேந்திராவின் மாணவர். சேதுவை அடுத்து பாலா தந்திருக்கும் படம் நந்தா. மிகுந்த எதிர் பார்ப்புகளை ஏற்படுத்திய திரைப்படம்.

பாலாவின் பெண்கள், பாவமான அபலைப் பெண்கள். அதிர்நது பேசினால் பயந்து போய்விடு வார்கள். ஆண்கள் நிறைய ஆண்திமிர் நிறைந்த வர்கள். தமிழ் சினிமாப் பார்முலாவில் இவர்களை ஆண்மை கொண்டவர்கள் எனக் குறிப்பிடுவார்கள் போலும். பாலாவின் சேதுவும் நந்தாவும் அப்படிப் பட்டவர்கள். பாலாவின் பாத்திரங்கள் புரிந்து கொள்ளக் கொஞ்சம் சிக்கலானவர்கள். நந்தா, அப்பாவை அத்துணை வெறுப்புடன் அடிப்பதற்கான காரணம், அப்பாவின் உடனடியான அடுத்த பெண் தொடர்பு என்பது சரியான காத்திரமான காரணமாக இல்லை. அதற்குப் பிற்பாடு, அவர் கொலை செய்கிற தருணம் வரை அவரை நகர்த்துவது அநீதிக்கு எதிரான தார்மீகத் தன்மைதான் என்பதுவும் அழுத்தமாக வரவில்லை.

ராஜ்கிரன் பாத்திரம் தமிழ் வாழ்வில் கால் பதிக்காத பாத்திரம் என்றுதான் சொல்ல வேண்டும். அநீதிக்கெதிரான காரியங்களை மட்டும் செய்கிற ஒருவர், தமிழகத்தில் அரசியல் ரீதியிலும் அதிகாரவரக்கத்தவரிடமும் இவ்வளவு செல்வாக்குக் கொண்டவராக இருப்பது தமிழகத்தின் கடந்த ஐம்பதாண்டு கால வரலாற்றை எடுத்துப் பார்க்கும் போது சாத்தியமேயில்லை. மகன் மீதான தாயின் தொடர்நத வெறுப்பக்கும் அழுத்தமான காரணங்கள் இல்லை. மகனையும் அவனது சூழலையும் அறிந்திருக்கிற தாய் மகனைக் கொலை செய்கிற அளவு போவது பாத்திர ரீதியிலான பரிணாமமாகப் படவில்லை.

நந்தா படத்தின் ஈழத்தமிழர் சித்திரிப்பு இது வரைத்திய வெகுஜன சினிமா தளத்தில் ஒரு மைல்கல் என்று சொல்லலாம். பாலச்சந்தரின் புன்னகை மன்னன் (ஈழத்தமிழர்கள் சிங்களப் பெண்ணைக் கடத்திக் கொல்ல முயல்கிறார்கள்.) கமல்ஹாஸனின் தெனாலி (அரசியல் விழிப்புணர்ச்சி அற்ற கேனப்பயலாக ஈழ இளைஞன்) போன்ற சித்திரிப்புகளை ஒப்பிட, பாலா வெகு நுட்பமாக அகதி முகாமில் வாழும் ஈழத்தமிழ்ப் பெண்களைச் சித்திரித்திருக்கிறார்.

முதலாவதாக அகதிமுகாம்களில் இருக்கிற ஈழத் தமிழ்ப் பெண்கள் உள்ளுர் அரசியல் வாதிகளாலும் போலீஸ் அதிகாரிகளாலும் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகிறார்கள் என்கிற விவரங்கள் நிறைய மனித உரிமை அறிக்கைகளில் பதியப்பட்டிருக்கிறது. இந்தக் கொடுமையை மிகுந்த கதைத் தர்க்கத்துடன் சென்சார் கைவைக்க முடியாத சாதுர்யத்துடன் பாலா நந்தாவில் கையாண்டு இருக்கிறார்.

இரண்டாவதாக தமிழ் சினிமா விகாரங்கள் எதுவுமற்ற ஒரு வெகுஜனச் சினிமா சட்டகத்துள், ஈழத் தமிழ்ப் பெண்களுக்கிடையிலான உரையாடல் களையும், அகதி முகாம் பெண்களின் காதல் உணர்வுகளையும் கூட்டுச் சந்தோஷங்களையும் (மழை நடனப் பாடல்) பாலா சொல்ல முயன்றிருக் கிறார். அம்மக்களின் மீதான அக்கறையுடன் பரிவுணர்வடன் கௌரவமாக இக்காட்சிகளைச் சித்தரித்திருப்பதற்காக பாலாவை நாம் பாராட்ட வேண்டும்.

நந்தா படம் ஒரு செய்தியைத் தெளிவு படுத்தி இருக்கிறது. இன்றைய தேதிக்குத் தமிழில் சினிமா எடுக்கிற வாலிபப் பையன்கள் காதலை மட்டும் விதம் விதமாகச் சொல்லிவருகிறார்கள். அதைத் தவிர வேறு எதுவுமே அவர்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. அஜீத், விஜய் போன்றவர்கள் தமது நட்சத்திர பிம்பத்தைக் கட்டியெழுப்ப முயன்று வருகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் பாலா என்கிற இந்த இளைஞர் மட்டுமே வித்தியாசமாகச் சிந்திக்கிறார். அவர் வெகுஜன சினிமா தளத்தில்தான் சிந்திக்கிறார். ஆனால் அவரிடம் கட்டுப்பாடும் கதைத் தேர்வில் கவனமும் இருக்கிறது. அவரிடம் இன்னும் காத்திரமான கதைத் தர்க்கம்கொண்ட படங்களை எதிர்பாரக்கிறோம்.

## கன்னத்தில் முத்தமிட்டால்

கன்னத்தில் முத்தமிட்டால் படத்தின் மையப் பிரச்சினையான ஈழப்பிரச்சினை, சுஜாதா, மணிரத்னம் போன்றோரால் திட்டமிட்டுத் திசை மாற்றப்பட்டது, இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, யாரேனும் ஒரு அனாதைக் குழந்தையை எவரேனும் தத்தெடுப்பார்களானால் அதுவே இப்படத்தின் நோக்கம் என்றார் மணிரத்னம். ஆனால், அவரது தேசியம் பற்றிய முன்னைய படங்களான ரோஜா, உயிரே. போன்றவற்றை அறிந்தவர்க்கு, இப்படமும் அந்த வரிசையில் மூன்றாவது படம் என உணர்ந்து கொள்வது ஒன்றும் கடினமான காரியமில்லை. ஈழப்பிரச்சினையைச் சொல்வதற்கான ஒரு உத்தியா கத்தான், குழந்தைத் தத்துப் பிரச்சினையை மணிரத்னம் உபயோகிக்கிறார் என்பது அங்கங்கு தர்க்கமற்று விழித்துக் கொண்டு நிற்கிற, வலிந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அரசியல் - சினிமா

ஏற்றப்படுகிற, திருகிய நிலையிலான திரைக் கதையே நமக்குச் சொல்லி விடுகிறது.

தகவல் தொழில்நுட்பத் தொழில் சார்ந்தவர்களின் பார்வையில் கதை சொல்வதை பம்பாய், ரோஜா, உயிரேயில் பாவித்த மாதிரி, அரசியல் வன்முறையின் இடையில் சிக்குப்பட்ட குழந்தைகளின் வழி கதை சொல்வதையும் மணிரத்னம் பம்பாயிலேயே தொடங்கி விட்டார். மணிரத்னத்தின் உயிரே படப் பெண் போராளியையும், சநதோஷ் சிவனின் டெரரிஸ்ட படப் பெண் போராளியையும் ஒப்பிட்டுப் பேசிய விமர்சனங்கள் உண்டு. டெரரிஸ்ட் படத்தில் தற்கொலைப் போராளிப் பெண்ணின் மனமாற்றத்திற்கு அவள் நம்பிய கர்ப்பமும். குழந்தைகள் மீதான நேசமும் காரணமாகிறது. கன்னத்தை முத்தமிட்டால் படம் ஒரு போராளிப் பெண்ணினால் கைவிடப்பட்ட குழந்தையின் வழி கதை சொல்கிறது.



மணிரத்தினத்தின் உயிரே படத்தில் இருந்து

மணிரத்னம் தேசியம் பற்றிய விமர்சனங்கள் கொண்டவர். ஆனால் அவரது விமர்சனம் போராளிகள் தரப்பு மீதான விமர்சனமாகத்தான் தொடங்குகிறது. ரோஜா, உயிரேயிலிருந்து கன்னத்தில் முத்தமிட்டால் வரை இந்தப் பார்வைதான் செயல்படுகிறது. இவரது பார்வையில் அரசு வன்முறைகள் சொல்லப்பட்டால் கூட, வன்முறையில் ஆதாரமான பங்காளிகளாக அவர்கள் சித்தரிக்கப் படுவதில்லை. தேசியம் பற்றிய அவரது கருத்தியல் சுஜாதாவின் வசனங்களின் வழி கட்டமைக்கப்படுகிறது. ரோஜா, உயிரே, கன்னத்தில் முத்தமிட்டால் என மூன்று படங்களினதும் வசனம் சுஜாதா என்பதை நாம் ஞாபகம் கொள்ள வேண்டும். தேசியத்தை சுஜாதா ஒரு ஜனநாயக அவாவாகக் காணபதில்லை. காலனியாதிக்கம் தோற்றுவித்த இன்றைய தேசிய அரசுகளின் அரசியல் சமநிலையைக் கலைக்கிறவர்களாகவே இனத் தேசியவாதிகளை அவர் காண்கிறார். ஆனால் சுஜாதா தன்னைச் சுற்றிய விமரசனங்களை உள்வாங்கிக் கொண்டு அதற்கேற்ப சமநிலையை முன்வைப்பதாகப் பாவனை காட்டும் சி.என்.என். செய்தியாளரின் சாதுரியம் மிக்கவர்.

ரோஜாவோடு ஒப்பிட உயிரே பேராளியின் பாத்திரம் வன்முறைக்காகச் சரியான காரணங்களை முன் வைக்கிற பாத்திரமாக இருந்தது. உயிரேவோடு ஒப்பிட கன்னத்தில் முத்தமிட்டால் படத்தில் போராளியின் நேரடியான அரசியல் பார்வை என்பதேயில்லை. காஷ்மீர் பிரச்சினையும், அஸ்ஸாம் பிரச்சினையும் இந்தியப் பிரச்சினை. தமிழனுக்குப் புவியியல் ரீதியில், கலாச்சாரம் மொழி சாரந்த அடிப்படையில் தொலைதூரப் பிரச்சினை. இந்தப் போராளிகள் மற்றும் இந்திய அரசு முரண்பாட்டில், அவர் ஏகாதிபத்திய சக்திகள் ஆயுதம் ஏற்றுமதி செய்கிற மேற்கத்திய அமெரிக்க அரசுகள் அவருக்குத் தெரிவதில்லை. இன்னும் இப்பிரச்சினையை விவாதிக்க அவர் தமிழகக் காவல் துறை தலைமையகமும் செல்வார். ஆனால் ஈழப் பிரச்சினை அப்படியல்ல. சுஜாதாவுக்கு ஈழக்கவிஞர் ஜெயபாலன், சேரன் போன்றவர்களை நேரில் தெரியும். ஈழ இலக்கியத் தொகுதிகளுக்கு அவர் விமர்சனமும் எழுதுகிறவர். ஈழம் அவர் பேசுகிற எழுதுகிற மொழியோடு சம்பந்தப்பட்ட புவியியல் பரப்பு.

இங்கு அவரது காஷ்மீர், அஸ்ஸாம் குறித்த அபிப்பிராயங்கள் செல்லுபடியாகாது. ஆகவே போராளி, அரசு முரணுக்கான காரணமாக அவர் ஆயுதம் விற்கிற சர்வதேசிய சக்திகளை, அதுவும் போகிற போக்கில்தான் ஒரு காட்சியில் குறிப்பிடுகிறார். ஆயுதம் விற்கிற சக்திகளை அவர் வெளிப்படையாகத் தாரளமாகக் குறிப்பிடலாம். அமெரிக்காவும் இஸ்ரேலும் மேற்கு நாடுகளும் தான் விற்கின்றன. அதைப் படம் சொல்வதில்லை.

தேசிய வன்முறைக்கான அடிப்படைக் காரணம் அதுமட்டுமல்ல, இனங்களுக்கிடையிலான சமத்துவக் கோரிகையே அதனது காரணமாக அமைகிறது. இந்தக் காரணம் படத்தில் துப்புரவாக நிராகரிக்கப்பட்டுள்ளது. போரில் ஈடுபட்ட போராளிகள் தரப்பிலான குழந்தைத் துயர்களின் அடிப்படையில், போராட்டம் பற்றிய விமர்சனத்தை இப்படம் பார்வையாளர்களிடம் கோருகிறது. அவர்களது மனிதத் தன்மையை இப்படம் கேள்விக்கு உட்படுத்துகிறது. ராணுவத்தின் தரப்பில் வன்முறையை மேற்கொள்கிறவர்களுக்கும், குழந்தைகள் அவர்களது துயர்கள் இருக்கும். அந்தத் துயர்களையும் வெளிப்படுத்துவதன் வழி, அரசு மீதான, ராணுவத்தினர் மீதான விமர்சனங்களையும் படம் எழுப்பி இருக்க முடியும். ஆனால் அந்தப் பிரதேசங்களில் எல்லாம் படம் போகவேயில்லை.

குழந்தையிடம், தாங்கள் பெற்றோர்கள் இல்லையெனச் சொல்கிற விஷயம், மனிதத் தன்மையற்று, உளவியல் ஆய்வுகள் அற்று, நிர்வாகப் பிரச்சினைகள் நியதிகள் தவிர்த்து, இட்டுக் கட்டப்பட்டதான வன்முறையாக திரைக் கதையில் நிகழ்கிறது. இலங்கைக்குள், ஈழப் பிரச்சினைக்குள் போக, சுஜாதாவுக்கும் மணிரத்னத்துக்கும் இதுவொன்றுதான் வழி. அரசியல் சமூகப் பொருளியல் கலாசாரப் பிரச்சினைகளுக்குள் போகாமல், திரையில் வன்முறையையும் உணர்ச்சி வசமான பாசக் காட்சிகளையும் நிறைக்க, இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வொன்றுதான் இவர்களுக்கு வழியாகப்பட்டிருக்கிறது. ஏனெனில் சுஜாதாவும் மணிரத்னமும் அரசியலற்ற அறிவுஜீவிகள் என நம்மை நம்பச் சொல்கிறார்கள்.

படத்தில் புவியியல் அடையாளம், சின்னங்கள் சார்ந்து எவையும் தர்க்கபூர்வமாக இல்லை எனப் பல விமர்சகர்கள் சுட்டியிருக்கிறார்கள். முழுக் கிராமமும் அழிந்து கிடக்க எதுவும் அழியாமல் வெளிச்ச வெள்ளத்துடன் இருக்கும் சிங்களவர் வீடு படு அபத்தம். கதை இரண்டாயிரமாம் ஆண்டுகளில் நடக்கிறது. அந்தக் காலகட்டத்தில் கொழும்பிலிருந்து ஒரு சிங்களவரை வடக்குக்கு வழிகாட்டியாக அழைத்துப் போவது, அவர் போராளிகளோடு மாதவன் சிம்ரனுக்காகப் பேசுவது எல்லாம் சுத்த அபத்தம். இக்காலத்தில் ஈழத்திலுள்ள போராளிகள் விடுதலைப் புலிகள் தவிர வேறல்ல. அவர்கள் அப்படியொரு கவிதையைச் சொல்வதும் சாத்தியமேயில்லை. பெண் புலிகளை ஹாலிவுட் ஸ்டைல் த்ரில்லோடு காண்பிப்பது, குழந்தை வீறிட்டு அலறுவது போலக் காண்பிப்பது என்பன இயக்குனரது விகார மனத்தின் உச்சம்.

புன்னகை மன்னனில் தமிழ் சிங்களப் பிரச்சினையை, இந்தியப் படங்களில் மாதிரி ஜாதிய மத இணக்கம் வேண்டும் என்கிற மாதிரிப் புரிந்து கொண்டு பாலசந்தர் சொல்லியிருப்பார். மனம் மாறிய சிங்களப் பெற்றோர் தம் மகளை தமிழ் பையனுக்குத் தரச் சம்மதிப்பார்கள். அப்படித்தான் இருக்கிறது பிரகாஷ்ராஜ் மாதவன் உறவு. இப்படி எல்லாம் இரண்டாயிரமாம் ஆண்டுகளில் வடக்கில் நடப்பது சாத்தியிமேயில்லை. சுஜாதா திரைக் கதையிலுள்ள அபத்தின், எழுத்துக் குரோதத்தின் உச்சம் எழுத்தாளனான மாதவன் கொழும்புக் கூட்டத்தில் பேசுகிற பேச்சு. பாரதி மீதோ, ஜெயகாந்தன் மீதோ சுஜாதாவுக்குக் கோபம் இருந்தால், அதை நாணயமாகக் கட்டுரை எழுதலாம். அதை விட்டுவிட்டு, எழுத்தை தெய்வமென தவமெனச் சொல்கிறவர்களை எல்லாம் நக்கலடிப்பது அசிங்கமாக இருக்கிறது. சுஜாதாவுக்கு எழுத்து அப்படியான விஷயமில்லை என்பதை மாதவன் சொல்கிறார்.

படத்தின் திரைக்கதையின் அபத்தம், பிரச்சினையைச் சித்திரித்ததில் உள்ள அபத்தம், என எதிர்மறை அமசங்களை எல்லாம் பார்த்தாகிவிட்டது, படத்தில் ஆக்கபூர்வமான அம்சங்களே இல்லையா? நிறைய இருக்கிறது. ஈழப் பிரச்சினையைச் சரியான அரசியல் நிலைபாட்டிலிருந்து சொன்னதாக நம்பப்படுகிற, காற்றுக்கென்ன வேலி படத்தோடு ஒப்பிட, இப்படத்தில் பாத்திரங்களின் குணச்சித்திர வளர்ச்சி கொஞ்சமாவது நம்பும்படியாக இருக்கிறது. நிறைய கிளைக் காதல் கதைகள் இப் படத்தில் இல்லை. அரசியல் பரிமாணம் தவிர்க்கப் பட்டிருக்கிறது என்பதை அங்கீகரித்துக் கொண்டு பார்ப்போமெனின், ஈழத் தமிழர்களின் அன்றாடத் துயர் குறித்த ஒரு அனுசரனையான பார்வையை



இயக்குநர்
கெ கீர்த்தி

# Secret Love
# இரகசிய சிநேகம்

கீர்த்தி சினி ஆர்ட்ஸ் தயாரிப்பான Secret Love விரைவில் திரைக்கு வர உள்ளது. £40,000 பட்ஜட்டில் முற்றிலும் இலண்டனில் படமாக்கப்பட்ட முழுநீளத் திரைப்படம் இதுவாகும்.

குண்டு வெடிப்பில் பெற்றோரையும் பேச்சையும் இழந்த விநோத் என்ற இளைஞன் இணையத் தளத்தில் மதுமிதா என்ற நிஜமற்ற பெண்ணை காதலிக்கிறான். அதனை அறியாத அவனின் நண்பன் வசுந்தனின் சகோதரி பிரிதா விநோத்தை காதலிக்கிறாள். இணையத்தளத்தில் வந்த மதுமிதா கற்பனை என விநோத் அறிகையில் அந்த மதுமிதா நிஜமாகிறாள்.

விறுவிறுப்பாக காட்சிகள் நகர்வதாக குறிப்பிடும் இப்படத்தின் இயக்குனர் கெ கீர்த்தி புலம் பெயர் சினிமாவில் கடந்த கால்நூற்றாண்டாக ஈடுபட்டு வருகிறார். இப்படத்தின் திரைக்கதை, வசனம் மற்றும் பாடல்களையும் இவரே எழுதி உள்ளார். இப்படத்தின் இசை அமைப்பையும் கீர்த்தியே மேற்கொண்டு இருந்தார். பாடல்களை ரவிசங்கரும் இந்துசிந்து இரட்டையர்களும் பாடி உள்ளனர்.

கடந்த யூன் முதலாம் திகதி தேசம் ஆதரவில் இடம்பெற்ற இலக்கிய நிகழ்வில் இப்படத்தின் காட்சிகள் காண்பிக்கப்பட்டு இருந்தது. இதன் பாடல் காட்சிகள் மிகவும் இரசிக்கக் கூடியதாக இருந்ததாக அவ்விழாவில் சஞ்சிகை விமர்சனத்தை மேற்கொண்ட ரி சோதிலிங்கம் குறிப்பிட்டார்.

இப்படம் தமிழகப் பார்வையாளர்களிடம் மட்டுமல்ல, அனைத்துப் பார்வையாளர்களிடமும் கோருகிறது. தமிழகத்தின் ஈழ அகதி முகாம்களை திறந்த வெளிச்சிறைச் சாலைகளாகக் கண்ட உண்மையையும் படம் சொல்லியிருக்கிறது என்பதுதான் இப்படத்தின் ஆக்கபூர்வமான அம்சம் என்று தோன்றுகிறது.□□□□□□□□□□□□□□□□□□□□□□□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அரசியல் அலசல்**

# ஊடகவியலாளர் மாநாடு



**கொன்ஸ்ரன்ரைன்**

ஏப்ரல் மாதம் 10ம் திகதியன்று இடம்பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் பத்திரிகையாளர் மாநாட்டை மேலோட்டமாக அவதானிக்கும் இடத்து, இம்மாநாடு சர்வதேச மட்டத்தில் தற்போது இடம் பெற்று வரும் சமாதான முயற்சியை சற்று வெளிச்சமிட்டு காட்டியது. வழமை போல பல தரப்பட்ட பத்திரிகைகளும் சக ஊடகங்களும் தமது வரையறைகளுக்கு ஏற்ப அம்மாநாட்டை தமது அரசியல் சித்தனைப் படி சுய நிறமிட்டுக் காட்டிக் கொண்டன.

யாழிலும் ஐரோப்பாவிலும் வெளியாகும் துதிபாடும் பத்திரிகைகள் மாநாட்டை ஆகா ஓகோ பேஸ் பேஸ் என்று பாராட்ட கொழும்புப் பத்திரிகைகள் வழமையான சந்தேகத்துடனேயே இதை அணுக இந்தியப் பத்திரிகைகள் மிகக் கடுமையாக விமர்சித்தன. சர்வதேச ஊடகங்களும் தமது அரசியல் நிலைப்பாட்டுக்கு ஏற்ப செய்தி வெளியிட்டன.

மிகுந்த நடைமுறைச் சிக்கல் மத்தியில் இவ்வாறான பாரிய பத்திரிகையாளர் மாநாட்டை வெற்றிகரமாக நடாத்தி முடித்தது, பாதுகாப்பு இராணுவ சாணக்கியம் ரீதியாக புலிகளுக்கு கிடைத்த வெற்றி. அதேவேளை ஓர் சர்வதேச பிரச்சார கண்ணோட்டத்தில் ஏனைய சர்வதேச பத்திரிகையாளர் மாநாடுகளுடன் வரிசைப்படுத்திப் பார்க்கும் போது இம்மாநாட்டை இன்னும் திறம்பட செய்து முடித்திருக்கலாம் என்றே எண்ணத்தோண்றுகிறது.

புலிகளின் தலைவர் பிரபாகரனும் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அடிப்படையில் எந்தச் செய்தியை வெளிக்கொணர்வது என்பதை திட்டவட்டமாக நிர்ணயித்து வைத்திருந்த போதிலும் அவை சொல்லப்பட்ட விதம், உடல் அசைவுகள் (Body Language), பாலா - பிரபா இரகசியமாகப் பேசிக் கொண்ட விதம் சிங்கள மொழி பெயர்ப்பாளர் ஒருவர் மேடையில் இல்லாமல் போனது எல்லாம் பெரும் குறையாகவே தென்பட்டது. மேலும் அன்ரன் பாலசிங்கம் " I am the Theritician" என பல தடவை தன்னைத் தானே முக்கியத்துவப்படுத்தியது பார்ப்பதற்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அதிலும் குறிப்பாக தலைவர் பிரபாகரனிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பாலசிங்கம் பதிலளிக்க முனையும் போது பத்திரிகையாளர்கள் ஆட்சேபம் தெரிவித்தது மேலும் சங்கடத்தை ஏற்படுத்தியது.

தலைவர் பிரபாகரன் மிக குறைந்த நேரமே பட்டும்படாமலும் மென்மையாக பேசினாலும் அப் பேச்சில் யாதார்த்தமும் உண்மையும் கூர்மையும் தென்பட்டது. குறிப்பாக செய்தித் திரிபு (spining) ஒன்றும் இல்லாமல் நேரடியான பதிலாக வெளியாகியது.

ஒட்டுமொத்தமாக சகல குறைநிறைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஒரு ஆங்கில சிங்கள மொழிபெயர்ப்பாளர் உடன் பிரபாகரன் தனியாக கேள்விகளுக்கு பதில் அளித்து இருந்தால் இம்மாநாடு மேலும் சிறப்பாக அமைந்திருக்குமென்றே எண்ணத் தோண்றுகிறது. இம்மாநாட்டில் அன்ரன் பாலசிங்கம், பிரபாகரனுடன் கூடவே இருந்து ஒரே விடயத்தை பேசியதால் சர்வதேச இராஜதந்திரிகள் மட்டத்தில் டொக்கடர் பாலசிங்கத்தின் அங்கிகாரம் சற்று உயர்ந்தாலும் புலிகளின் தலைவருக்கு இம்மாநாட்டினால் பாரிய பயன் ஏதும் ஏற்பட்டு இருக்காது. இம்மாநாட்டை நடத்த மன ரீதியாகவும் பயிற்சி ரீதியாகவும் தலைவர் பிரபாகரன் தயார் படுத்தப்படவில்லை என்றே வெளியில் இருந்து அவதானிக்கும் போது தோண்றுகிறது.

உலகில் பிரசித்தி பெற்ற தலைவர்கள், தொழில் அதிபர்கள் எனப் பலரும் முழுநேரப் பயிற்சியாளர்களை வேலைக்கு அமர்த்தி தமது தோற்றத்தையும் பேச்சுத் தன்மையையும் முன்னேற்றுகின்றனர். இன்றைய விரைந்த விஞ்ஞான உலகில் ஓர் கருத்தை எப்போது எப்படி வெளிக்கொணருவது என்பது மிகவும் முக்கிய விடயம். எதிர் காலத்தில் விடுதலைப் புலிகள் இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்துவது அவசியமானது.

விடுதலைப் புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுமிடத்து அவர்களது செயற்பாடுகள் சர்வதேசமட்டத்துக்கு உயர்த்தப்படல் வேண்டும். தமிழர்களை தற்போது பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகள் சர்வதேச பிரச்சாரத்தில் ஸ்ரீலங்கா அரசிற்கு ஈடாக இருக்க வேண்டும். எழுச்சிப் போராட்டங்களும் விழிப்புப் போராட்டங்களும் உள்நாட்டு அரசியலில் ஒரு தாக்கத்தை ஏற்படத்தினாலும் சர்வதேச மட்டத்தில் அவை பெரிதாக எந்த தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஏப்ரல் 10ம் திகதி நடந்தேறிய ஊடகவியலாளர் மாநாடு தமிழர்களுக்கு முக்கியமாக தென்படுகின்ற போதிலும் சர்வதேச மட்டத்தில் அது எந்தப் பயனை அளித்திருக்கம் என்பது சந்தேகத்துக்கிடமானதே.□□□□□□□□□□□□□□□□□□□□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழநெருப்பில் குளிர் காயும் படைப்பாளிகள்



விமல் குழந்தைவேல்

ஈழத்தில் சமாதானம். கேட்பதற்கு இதமாகத்தான் இருக்கின்றது. இருபத்தைந்து வருடகாலமாக மக்களின் மனதில் ஏற்பட்ட காயத்துக்கு இந்த சமாதானம் மருந்தாகப் போகின்றது என்பது உண்மையென்றாலும் அந்தக் காயங்களினால் மக்கள் மனதில் ஏற்பட்ட தழும்புகளையும் வடுக்களையும் மறைக்கலாம், மறுக்கலாமென்றால் அது கேள்விக் குறியாகத்தான் இருக்கும்.

எரிந்து கொண்டிருந்த ஈழநெருப்பில் சொந்த லாபம் கருதி குளிர்காய்ந்தவர்கள் பலர். அரசியல் வாதிகள், அந்நிய சக்திகள், வியாபாரிகள் ......... என நீண்டு போகும் இந்தப் பட்டியலில் இலக்கிய வாதிகளும் படைப்பாளிகளும் இடம்பெற்றார்கள் என்பது தான் உண்மை.

ஈழப்போராட்டத்திற்கு ஊடகங்களின் பங்கு அதிகளவில் இருந்திருக்கின்ற போதிலும் இலக்கியம் என்ற பெயரில் புலம்பெயர் நாட்டில் தங்களின் பேருக்கும் புகழுக்காகவும் ஈழப்போராட்டத்தையும் அதனோடு ஒன்றிப் பிணைந்த அகதிப் பிரச்சனை பற்றியும் எழுதியவர்கள் அதிகம். எவராய் இருந்தாலும் எழுத்தாளனாகி விடலாம் என்ற தகுதிக்கு காரணமாய் அமைந்தது புலம் பெயர்ந்த அகதிகள் பிரச்சனை தான் என்றாலும் அவர்களை இலகுவாய் எழுத்தாளனாக்கிவிட தமிழ் நாட்டில் குறிப்பிட்ட பதிப்பகத்தார் தான் முக்கிய காரணமாக இருந்து இருக்கின்றார்கள்.

ஆறு மாதத்துக்கு ஒரு தடவை வெளிநாடுகளுக்கு சுற்றுலா வரும் தமிழ்நாட்டுப் பதிப்பகத்தார் திறமையான ஈழத்து முகவர் மூலம் வெளிநாட்டில் இலக்கியக் கூட்டம் என்ற பெயரிலும் புத்தகக் கண்காட்சி என்ற பெயரிலும் கடை விரிக்கின்றார்கள். ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்ற சரக்கு வியாபாரம் போல நீங்கள் ஒருவரை அறிமுகப்படுத்தினால் உங்களின் புத்தகம் இலவசமாகப் பதிப்பித்துத் தரப்படும் என்ற ஆசை வார்த்தையில் முகவர்களும் பிள்ளை பிடிப்பது போல் புதிய எழுத்தாளர்களைப் பிடித்துக் கொடுக்கின்றார்கள். ஒரு நாளில் இருபதுக்கும் மேற்பட்டவர்களின் நூல்களை வெளியீடு செய்யும் சாதனையையும் (ஜேர்மனியில் 22 நூல்கள் வெளியிடப்பட்டது.) அந்தப் பதிப்பகத்தார் செய்து காட்டுகிறார்கள். ஆனால் இவர்கள் (தமிழ்) ஈழத்தில் எத்தனையோ திறமையான எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள். அங்கு சென்று உங்கள் கடையை விரிக்க முடியுமா? முடியாது. காரணம் உங்களை அழைக்க அவர்களிடம் வசதியில்லை. நீங்கள் சுற்றிப் பார்க்க அங்கு ஒரு இடமுமில்லை.

வெளியீட்டு விழாக்களில் ஊக்குவிப்பு வார்த்தைகளுக்கும் குறைவிருக்காது. பதிப்பகத்தார் சொல்லுவார் இப்போது சொல்கின்றேன் எழுதி வைத்துக்கொள்ளுங்கள் இந்தப் புத்தகத்துக்கு தமிழ் நாட்டில் பரிசு நிச்சயம் என்பார். எப்படிச் சாத்தியப்படுகின்றதோ அவர் சொன்னபடியே பரிசும் கிடைத்துவிடுகின்றது.

வனவாசத்தில் கண்ணதாசன் எழுதினார். ஒரு மேடையில் அப்போது இளைஞராக இருந்த இப்போதைய அரசியல் தலைவர் ஒருவர் பேசி முடிக்க மேடையில் இருந்த அறிஞர் அண்ணா அவருக்கு தங்கமோதிரம் பரிசளித்தார்: அதைப் பார்த்த கண்ணதாசன் அண்ணாவிடம் சென்று ஏன் உங்கள் கையால் நான் தங்க மோதிரம் பெற்றுக் கொள்ள தகுதியில்லாதவனா என்றாராம். அதற்கு அண்ணா ஏன் நீயும் கூட ஒரு மோதிரம் வாங்கித் தந்திருந்தால் அதை உனக்குப் பரிசளித்திருப்பேனே என்றாராம்.

சரி அவர்கள் வியாபாரிகள் தங்கள் இலாபத்தைத் தான் பார்ப்பார்கள். அவர்கள் அறிமுகப் படுத்தும் எழுத்தாளர்கள் ஆவது தரமான காத்திரமானவர்களா என்றால் சில சமயம் அதுவும் இல்லை.

எழுதுவதெல்லாம் அகதிப் பிரச்சனை, ஏஜென்சிக்குக் காசு கட்டி ஏமாறுவதையும் பட்ட கடன் தீர்க்க வட்டிக்குக் கடன் வாங்குவதையும் சீட்டுக் கட்டுவதையும் காதலன் கூப்பிடும் பெண்ணை ஏஜென்சிக்காரன் கூட்டிக்கொண்டு ஓடித் தலைமறைவாவதையும் தவிர இவர்களால் அகதிப் பிரச்சனை என்று வேறு எதையும் எழுத முடிவதில்லை. அதற்காக அவர்களையும் குறைகூற முடியாது. ஏனெனில் இந்த எழுத்தாளர்களெல்லாம் பிறந்து வளர்ந்தது வாழ்ந்தது எல்லாம் ஈழப்பிரச்சனை தொடங்கிய காலத்தில் இருந்து இதுநாள் வரையிலும் தான். எனவே தான் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு முந்திய நிகழ்வுகளை அவர்களால் இலக்கியமாகப் பதிய முடியாமல் இருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## புலம்பெயர் இலக்கியம் ஓர் பார்வை

போராட்ட நிகழ்வுகளையோ சிறைப் பிடிப்புகளையோ தாய் மண்ணின் துயரங்களையோ இந்த மலிவு விலை எழுத்தாளர்கள் எழுதவும் மறுக்கின்றார்கள், அப்படி எழுதினால் பதிப்பகத்தார் அந்நூலை பதிப்பிடவும் மறுக்கிறார்கள்.

ஆயுதம் கொடுக்காதே அகதிகளைத் திருப்பி அனுப்பாதே என்றெல்லாம் ஊர்வலம் போகும் புலம்பெயர் அகதிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து புலம்பெயர் எழுத்தாளர்களே இனிமேல் எங்களைப் பற்றி எழுதத் தேவையில்லை, எழுத வேண்டாம் என்றெல்லாம் கோஷம் போட்டு ஊர்வலம் போனால் இந்த எழுத்தாளர்களுக்கு எல்லாம் நாடியில் பேனா வைக் குத்தி முகட்டைப் பார்க்க வேண்டிய நிலமை தான் ஏற்படும். ஏனெனில் அந்தளவுக்கு அகதிகள் பேரைச் சொல்லிச் சொல்லி எழுதி எழுதியே தங்களின் பெயர்களைத் தக்க வைத்துக் கொண்டார்கள் இந்தத் திடீர் எழுத்தாளர்கள்.

நானும் அச்சேற்றும் ஆசையில் அவசரப்பட்டு எனது மண்ணும் மல்லிகையும் என்ற நாவலில் அடிசறுக்கியவன் என்ற அனுபவத்தில் சொல்கின்றேன். விலைகொடுத்து வாங்கும் பரிசுக்கும் போலிப் பாராட்டுக்கும் ஆசைவார்த்தைக்கும் மயங்கி அவசரப்பட்டு எழுதுவோமானால் நாம் குண்டுச் சட்டிக்குள் தான் குதிரை ஓட்டுவோம். நம் வாழ்க்கைப் போராட்டங்கள், மன ரணங்கள், அதன் வேதனைகள் எல்லாம் நூற்றாண்டுகள் கடந்த பின்பும் நிலைத்து நிற்கக் கூடிய தேடல்களாக பதியப்படல் வேண்டும். அதற்கு நிதானம் வேண்டும். நிதானிப்போம் நிதர்சனம் பெறுவோம்.

தமிழ் நாட்டின் பதிப்பகத்தார் தான் அப்படி என்றால் சினிமாப்படத் கலைஞர்கள் கூட இப்போது ஈழப் பிரச்சனையைக் காட்டிப் பணம் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். ஒரு படம் வெற்றி பெற்றால் அதனைப் போலவே தொடர்ந்தும் படம் பண்ணிப் பழக்கப்பட்ட தமிழ்நாட்டுச் சினிமாத்துறை இப்போது அண்மைக் காலமாக பணம் பார்க்க படம் பண்ண கையில் எடுத்திருக்கும் விடயம் ஈழப்பிரச்சனை.

ஈழப்பிரச்சனையைச் சொல்லுகிறார்களோ இல்லையோ படம் வெளிவரும் முன்பே இது ஈழப் பிரச்சனை பற்றிய படம் என்று விளம்பரம் செய்து விடுவதால் படத்துக்கு அமோக எதிர்பார்ப்பினை ஏற்படுத்தி விடுகிறார்கள். காரணம் இப்போதெல்லாம் வெளிநாட்டுப் பிரதிகளே அமோக வசூலைக் கொடுக்கின்றது.

காற்றுக்கென்ன வேலி, நந்தா, கன்னத்தில் முத்தமிட்டால், தெனாலி இவைகளெல்லாம் ஈழப் பிரச்சனை பற்றிய படம். சொந்த மண்ணையும் சொந்தங்களையும் பிரிந்து தங்கள் மண்ணின் நினைவுகளுடன் வாழும் ஈழத்தவர்களுக்கு இந்தப் படங்கள் ஆறுதல் அளிக்கும் என்று திரையரங்குகளுக்குச் சென்றால் ஏமாற்றத்துடனேயே திரும்பிவர வேண்டி உள்ளது. புலம்பெயர் சினிமா ஆர்வலர்கள் ஆவது அதற்கானமுயற்சியை எடுக்க வேண்டும். அது அவர்களது வரலாற்றுக் கடமையும் கூட.□□□□□□□□□□□□□□□□□□□□□□

**மணிமேகலைப் பிரசுராலயத்தின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்**

# கடுகதி வெளியீடு

யூன் மாதம் 8ம் திகதி மணிமேகலைப் பிரசுரத்தின் நூல் வெளியீட்டு விழாவும் புத்தகக் கண்காட்சியும் மனோபார்க் ரினிற்றி சமூக மையத்தில் இடம்பெற்றது. மாலை 5.30 மணி முதல் 9.30 மணி வரை நடைபெற்ற இக்கடுகதி வெளியீட்டு விழாவில் 12 எழுத்தாளர்களின் அரசியல், சமூகம், இலக்கியம், வரலாறு என 12 நூல்கள் ஒரே மேடையில் வெளியிடப்பட்டது.

இவ்வெளியீட்டு விழாவில் காலம் சென்ற ஜி ஜி பொன்னம்பலத்தின் The Marathan Crusade for Fifty - Fifty, டொக்டர் இந்திரகுமாரின் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஓர் அறைகூவல், அரங்கை முருகையனின் ஆறுமுக நாவலரின் தமிழ் இலக்கணச் சுருக்கம், நடிகர் திரு ஆர் எஸ் மனோகரின் இலங்கேஸ்வரன் - நாடக நூல், கௌதம நீலாம்பரனின் யாழ்ப்பாணத்தின் வீரத்தமிழ் மன்னன் இரண்டாம் சங்கிலி - நாடக நூல், பண்டிதர் இ வடிவேலின் திருக்கோணஸ்வரம் தான் தெட்சிணகயிலாயம், புரட்சிபாலனின் வசந்தகால கோலங்கள் (நாவல்), செ குணரத்தினத்தின் ஒரு கிராமம் தலைநிமிர்கிறது (நாவல்), வஹிதா அவ்தாதின் பாலர் பாமாலை (கவிதை), வே ஜெ போஸின் ஈழத்தின் தமிழர்-சிங்களவர் இனவரலாறு, டொக்கடர் எஸ் தியாகராஜாவின் நீ சாகமாட்டாய் ராதா (சிறுகதைத் தொகுப்பு), தனபாக்கியம் குணபாலசிங்கத்தின் இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும் திராவிடக் கலாச்சாரமும் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டது.

கந்தையா இராஜமனோகரன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் மணிமேகலைப் பிரசுர நிர்வாக இயக்குநர் ரவி தமிழ்வாணன் கலந்துகொண்டார். இவ்விழாவுக்கு வீரகேசரி (ஞாயிறு) ஆசிரியர் வி தேவராஜா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

மேற்படி நூல்களில் இரு நாவல்களும் கவிதையும் எம் ரி செல்வராஜாவால் ஆய்வு செய்யப்பட்டது. இரு நாடக நூல்களும் நடராஜா கண்ணப்புவாலும் தொல்லியல் ஆய்வு நூல் மு நற்குணதயாளனாலும் ஜ ஜ பொன்னம்பலத்தின் நூல் நடராஜா கிருஷ்ணராஜாவாலும் மற்றய மூன்று நூல்களும் சிவதணிகாசலத்தாலும் ஆய்வு செய்யப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# புனர்வாழ்வு

## Association for Rehabilitation of the Disabled - AROD



**Dr N சிவராஜா**
தலைவர்
சமூக மருத்துவப் பிரிவு
யாழ் பல்கலைக் கழகம்

யாழ் குடாநாட்டில் பல்வேறு காரணங்களினால் உடல் வலுவிழந்தவர்களின் நலன்களையும் அவர்களின் புனர்வாழ்வையும் பேணும் பொருட்டு 1990 மாசி 4 இல் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி என்னும் இடத்தில் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஜெய்ப்பூர் செயற்கை அவயவ நிலையத்தில் இருந்து செயற்கை அவயவம் பொருத்தப்பட்டு வெளியேறியவர்களின் புனர்வாழ்வை மேம்படுத்தும் முகமாகவே இது ஆரம்பிக்கப்பட்டது. தற்போது வெவ்வேறு வகைகளில் உடல் வலுவிழந்தவர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளைச் செயற்படுத்தி வருகின்றது.

இந்நிறுவனத்திலிருந்து வலுவிழந்த பெண்களுக்கு தையற் பயிற்சி, பூவேலை, பெண்களுக்கான தலை அலங்காரம், பன்னவேலை, கேக்ஐசிங் ஆகிய கைத்தொழில்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதே போன்று வலுவிழந்த ஆண்களுக்கு தும்புத்தடி, விளக்குமாறு தயாரித்தல், கதிரை பின்னும் பயிற்சி, மருந்து வில்லைகள் இடும் சிறு உறைகள் ஒட்டுதல், மெழு குதிரி போன்றன உற்பத்தி செய்வதில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சிகளைப் பெறுவதன் மூலம் உடல் வலுவிழந்தோர் வாழ்வில் வருமான ரீதியிலும், உளரீதியிலும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி தாங்களும் சமூகத்தில் ஒரு அங்கத்தவர் என்ற நிலையை உணரும்படி இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் அமைந்தன.

இப்பயிற்சிக் காலப்பகுதியில் பயிற்சியாளர்களுக்கான தங்குமிட வசதி, மற்றும் உணவு வசதி என்பன செய்து கொடுக்கப்பட்டன. சுண்டுக்குளியில் இயங்கிய இந்நிறுவனத்தில் வலுவிழந்தவர்களினால் கோழிப் பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இங்குள்ள நாட்டு நிலைமை சீரற்றுப் போனதால் இச்செயற்பாட்டை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. இந்நிறுவனத்திலிருந்து முச்சக்கரவண்டி, தள்ளுவண்டி, ஊன்றுகோல், நடை பழகும் சட்டம் போன்றன இலவசமாக வழங்கப்படுகின்றன.

1. வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட வலுவிழந்தோருக்கு மாதாந்த உதவிப்பணம் வழங்கும் திட்டம் ஒன்றும் நடைமுறையில் உள்ளது.

2. வலுவிழந்தோருக்கான புதிய தொழிற் பயிற்சிகள் உருவாக்கப்பட்டு அவற்றிற்கான மூலப்பொருட்களை வழங்கி அவர்களினால் செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதிலும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

உடல் நலிவுற்ற வலுவிழந்தவர்களுக்கு வைத்திய ஆலோசனைப்படி சத்துணவு, வேறு மருந்து வகைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. இதன் மூலம் அவர்கள் வருவாயையும், மனத் திருப்தியை






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## புனர்வாழ்வு

யும் பெறுகின்றனர். வறுமைக் கோட்டிற்கு உட்பட்டு கல்வியைத் தொடர முடியாதுள்ள வலுவிழுந்த மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி அவர்களின் கல்வியைத் தொடர வழி செய்யப்படு கின்றது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 15 வருடங்களாக வருடா வருடம் 50 - 100 பேர் மிதி வெடியினால் பாதிக்கப்படுகிறார்கள். மிதிவெடியால் பாதிக்கப்பட் டோரில் பெரும்பாலானோர் வறுமைப்பட்டவர்கள். தங்கள் அன்றாட ஊதியத்தை பெறுவதற்காக மிதி வெடியுள்ள பிரதேசத்தில் நுழைகிறார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு செயற்கை அவயவம் பொருத்தப்படும் வரை அவரது குடும்பத்திற்கு அடிப்படை வசதிகளை 'அரோட்' நிறுவனம் செய்கிறது. செயற்கை அவயவம் பொருத்தப்படும் காலப்பகுதியில் உணவு வசதி செய்து கொடுக் கப்படுகின்றது. மிதிவெடியால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு இயன் மருத்துவம் மற்றும் ஆற்றுப் படுத்தற் சேவைகள் இந்நிறுவன அலுவலகர் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிறுவனம் மூலம் வீடுகளிற்குச் சென்று வலு விழுந்தோர்களுக்கான இயன் மருத்துவ சேவை வழங்கப்படுகின்றது.1998இல் இயன் மருத்துவ சேவையை விரிவுபடுத்தும் முகமாக 6 பேர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டது. இவர்கள் மூலம் யாழ் மாவட்டத்திலுள்ள வலுவிழுந்தோருக்கு பல சேவைகள் செய்யப்பட்டது. இவர்கள் மூலம் யாழ் மாவட்டத்திலுள்ள உடல் வலுவிழுந்தவர்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றன. இயன் மருத்துவ சேவையை விஸ்தரிக்கும் நோக்குடன் 2001ம் ஆண்டு 12 பேர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டது. இவர்கள் மூலம் யாழ் போதனா வைத்திய சாலையில் இயன் மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் நீண்ட நாள் நோக்கங்களாக வலுவிழுந்தோருக்கான புதிய பயிற்சிகளை வழங்குதலும் விரிவுபடுத்தலும், இவர்களுக்கான நிதி உதவி, உடல் செயற் பாடுகளை மேம்படுத்தல். இவர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்குரிய விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்தல், வலுவிழுந்தவர்களுக்கான சிறப்பான விடுதி வசதி செய்து கொடுத்தல், வலுவிழுந்தவர் களுக்கான இயன் மருத்துவ சேவை செய்ய ஒரு



நிலையம் அரம்பித்தல் போன்றன திட்டமிடப்பட்டு உள்ளது. மேலும் செவிப்புலன் அற்றோரைப் பரிசோதிக்கும் நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையத்தின் ஊனமுற்றோர் தினவிழா வருடாந்தம் நடாத்தப்பட்டு வலுவிழுந்தவர்களிடம் உறைந்துள்ள ஆற்றல்கள் வெளிப்படுத்தப்பட்டு அவர்களுக்கு பரிசுகள் வழங்கி உற்சாகப்படுத்தப் படுகின்றது. இவ்வாறு பல சேவைகள் இந்நிறுவனம் மூலம் முன்னெடுக்கப்பட்டு வலுவிழுந்தோரின் வாழ்வு சிறப்படைய வழி வகுக்கப்பட்டு வருகின்றது.

1995இல் இங்கு ஏற்பட்ட இடப்பெயர்வால் இந்நிறுவனம் சிலகாலம் மூடப்பட்டு 1996இல் மீண்டும் கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியில் செய்றபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. மீண்டும் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக 2000 ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஆடியபாதம் வீதி, திருநெல் வேலியிலுள்ள சங்கத்தின் போசகரான, தற்போது அமெரிக்காவில் உள்ள Dr சோ. சண்முகலிங்கத்தின் குடும்பத்தாரின் வீடு ஒன்றில் செயற்பட்டு தனது சேவைகளை வழங்கி வருகின்றது.

கடந்த ஐந்து வருடங்களில் 25 முச்சக்கர வண்டிகள், 7 தள்ளு வண்டிகள், 44 ஊன்று கோல்கள், நடைபழகும் சட்டம் முதலியவை வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தள்ளு வண்டி அல்லது முச்சக்கர வண்டி £125 செலவாகும். ஊன்று கோல்கள் £15 செலவாகும். அன்பளிப்புகள் செய்ய விரும்புவோர் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். பணம் அனுப்புவதாக இருந்தால், அனுப்ப வேண்டியது

A/c No :- 13113
Commercial Bank, Jaffna, Sri Lanka.

To the Account of:
Association for Rehabilitation of the Disabled, Jaffna.

எமக்கு நேரடியாக பணம் அனுப்பும் பொழுது சங்கத்தின் பொருளாளருக்கும் அறிவிக்கவும்.

இந்நிறுவனத்தின் தற்போதைய விலாசம் :-
Association for Rehabilitation of the Disabled (AROD)
47/2, Adiyapatham Road,
Thirunelvely North,
Jaffna,
Sri Lanka.

Tel :- 0094 213589
Email :- nsiva@sltnet.lk



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**என் செல்வராஜா**
(நூலகவியலாளர்)

நூல்களை எரிப்பதும் நூலகங்களை எரிப்பதும் அறிவுஜீவிகளை அழிப்பதும் தமக்குப் பாதகமானதெனக் கருதும் மாற்றுக் கருத்தை இல்லாமல் செய்வதற்கான வழி முறைகளாக அதிகார வர்க்கங்களினால் நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

மடாலயங்களில் சேகரித்து வைக்கப்பெற்ற நூல்களை எதிரிகள் அழித்தார்கள், அலெக்சாந்திரியா நூலகத்தை நிர்மூலமாக்கினார்கள் என்பது எல்லாம் வரலாறு. பப்பைரஸ் என்னும் பத்திரிகைத் தாளின் முன்னோடி அறியப்படாத அந்நாளில் இருந்த நூல் ஒரு பிரதியோ, சில பிரதிகளோ ஏடுகளிலும், களிமண் தகடுகளிலும் எழுதப்பட்டுப் பேணப்பட்டு வந்திருந்தன. அவற்றை அழிப்பதன் மூலம் அதிகார வர்க்கம் அதிலிருந்த கருத்துக் களை குழி தோண்டிப் புதைப்பதில் ஓரளவு வெற்றி கண்டிருக்கலாம். அன்று மட்டுமல்ல இன்று அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பிற்காலத்திலும் இந்த நடைமுறையைக் கைக்கொள்வதினால் எதைச் சாதித்து விட்டார்கள்?

கி.மு.213இல் புராதன சீனாவின் சக்கர வர்த்தி Shih Huang-ti. ஒருங்கிணைக்கப்பட்ட பெருஞ்சீனப் பேரரசின் முதலாவது மன்னராகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டவர். இவர் தான் சீனப் பெருஞ்சுவரைக் கட்டுவிப்பதில் முன்னோடியாய் இருந்தவர். தனது ஆட்சிக் காலத்தில் தான் சீன வரலாறு எழுதப்பட வேண்டும் என்ற நோக்கில் விவசாயம், விஞ்ஞானம் மற்றும் எதிர்வு கூறும் சாத்திர நூல்களைத் தவிர்ந்த அனைத்து நூல்களையும் சீனாவில் எரித்துவிடும்படி உத்தரவிட்டிருந்தார். மாய மந்திரக்கலைகளின் பாலிருந்த இவரது அதீத ஈடுபாட்டுக்கு கன்பூசிய கொள்கையாளர்களினால் தெரிவிக்கப்பட்ட மாற்றுக் கருத்தும் இந்த முடிவுக்குக் காரணம் என வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். தடைசெய்யப்பட்ட நூல்கள் பற்றிக் கலந்துரையாடுவதே மரண தண்டனைக்குரிய குற்றமாகப் பிரகடனப்படுத்தி இருந்தார். இதன் மூலம் எதிர் பார்த்த நீடித்த ஆட்சி அவருக்குக் கிடைக்கவுமில்லை. பெருஞ்சீன வரலாறு திருத்தி எழுதப் படவுமில்லை. சீன உளவியல் கருத்துக்கள் உலகப்புகழ் பெறத் தவறவுமில்லை.

மாறாக, கி.மு.206 இன் பின் அவரது ஆட்சியைக் கைப்பற்றிய ஆட்சியாளர்களால் சீன இலக்கியம் செழிக்க வைக்கப்பட்டது. ஆவணக் காப்பகங்கள் உருவாகின. பழைய வரலாறு பேண வழிகோலப்பட்டது.

கிரேக்கத்தில் அலெக்சாந்திரியா நூலகம் கி.மு.283இல் பல்லாயிரம் ஆவணச் சேகரிப்புகளால் பெருமை பெற்றிருந்தன. ஏதென்சின் பலநூறு நாடகப்பிரதிகள் அங்கிருந்தன. அரிஸ்டாட்டிலின் சொந்தச் சேர்க்கைகள் கிரேக்க இலக்கியங்கள் அனைத்தும் பேணப்பட்டு வந்தன. நவீன பொது நூலகச் சிந்தனை இங்கு தோற்றம் பெற்றிருந்தது. பல்வேறு படையெடுப்புக்களால் இவை சேதமாக் கப்பட்ட போதும் கிரேக்க இலக்கியமோ அரிஸ்டாட் டிலின் தத்துவங்களோ மறைந்துவிடவில்லை.

தமிழகத்தில் சோழர் கால சாசன ஆவணங் களிலே அடிக்கடி இடம்பெறுகின்ற சரசுவதி பண்டாரகங்கள் என்பது அக்காலத்தில் இருந்த நூலகங்களே என்பது வரலாற்றாய்வாளர் கூற்று. இவை பின்னாளில் சரஸ்வதி மகாலயம் என்றும் குறிக்கப்பட்டு வந்துள்ளது. படையெடுப்புக்களால் நூலகங்கள் அழிந்த போதிலும் இங்கு பேணப்பட்டு வந்த தமிழ் இலக்கியங்கள், இந்து சமயத் திருமுறைகள் எவையும் அழியாமல் இன்றும் நிலை பெறுகின்றன.

ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## யாழ் நூலக எரிப்பு 21 ஆண்டுகள்

காலகட்டத்தில் மே 1933இல் இடம்பெற்ற நூல் எரிப்புக் கொண்டாட்டமும் எமக்கு வரலாற்றில் சீன மன்னன் Shih Huang-ti. யின் நடவடிக்கைகளை நினைவூட்டுகின்றன. அன்று ஹிட்லரின் நாசி ஆதரவாளர்களால் நூல்கள் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யப்பட்டும் சேகரித்தும் எரிப்பதற்காகப் பொது இடமொன்றில் மலையாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த அறிவியல் மற்றும் வரலாற்று நூல்களின் முன்னால் நின்று அன்றைய நூல் எரிப்பு வைபவத்தை சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கி (எரித்து) வைத்துப் பேசும் போது ஜேர்மானிய கொள்கைத்திட்ட மந்திரி ஜோசப் கொயபெல்ஸ் (Joseph Goebbels) கூறிய வாசகங்கள் இவை.

"அடுத்த 1000 வருடங்களுக்கு ஜேர்மானிய வாழ்க்கை முறையே உலகெங்கும் விதந்து பேசப்படப் போகின்றது. இன்று கொழுந்து விட்டெரியப் போகும் இத்தீயின் சுவாலைகள் ஒரு பழைய சகாப்தத்தின் முடிவைத் தெரிவிப்பதுடன் புதிய சகாப்தத்தின் மலர்வுக்கும் ஒளியூட்டப் போகின்றது. வரலாறு திருத்தி எழுதப்படுகின்றது."

தமது அதிகார வலிமையால் ஜேர்மனியர்களின் பழைய வரலாற்றை இந்த நூல் எரிப்பால் அவர்களால் துடைத்தெறிய முடியவில்லை. மாறாக அந்த எரிப்பின் பின் எஞ்சிய சாம்பல் தான் அவர்களது முகங்களில் கரியாய் நிலைத்தது.

சமகால நிகழ்வுகளை நாம் பார்ப்போமானால், 1981இல் எமது தாயக மண்ணில் தமிழ் இன அழிப்பைத் திட்டமிட்டவர்கள், யாழ்ப்பாண நூலகத்தை எரித்தார்கள். ஈழநாடு பத்திரிகைக் கட்டிடத்தை எரித்தார்கள். அவர்கள் கண்டது என்ன? 21 வருடங்களாகியும் அந்த ரணம் மாறாத நிலையில் உலகளாவிய ரீதியில் யாழ்ப்பாண நூலகம் பேசப்படும் நிலை உருவாகியது. அந்த எரிப்பின் பின் விடுதலைப் போராட்டம் பற்றிய தீவிரம் அதில் அது வரை அக்கறைப்படாத பல புத்திஜீவிகளையும் அரசியலுக்கு அப்பாலும் கவர்ந்தது. மேலும் பல்லாயிரம் விடுதலைப் போராளிகளை போராட்டம் உள்வாங்கியது. ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய செய்தியை, யாழ். நூலக எரிப்பு உலகின் மூலை முடுக்கெல்லாம் எடுத்துச் சென்றது. அன்று அங்கிருந்த ஒரே ஒரு பத்திரிகை ஈழநாடு. ஏரியுண்டதன் பின் என்ன நடந்தது. எத்தனை பத்திரிகைகள் அங்கு முளைவிட்டன. இங்கு புகலிடம் வரை அவை படர்ந்துள்ளன. இது வரலாறு. இவை எல்லாம் 1981 மே 31ம் திகதி ஊரடங்கு நள்ளிரவில் இலங்கை அரசின் காவலர்கள் உரசிய ஒரு தீக்குச்சியின் பலாபலன்.

பொஸ்னியாவில் 1890இல் கட்டப்பெற்று 155,000 அரிய நூல்கள் உள்ளிட்ட ஒன்றரை மில்லியன் நூல்களைக் கொண்டிருந்த தேசிய, பல்கலைக்கழக நூலகங்களை சேர்பியர்கள் ஆகஸ்ட் 1992 இல் மூன்று நாட்களாக முயன்று எரித்தார்கள். விளைவு? உலக அரங்கில் பொஸ்னியாவுக்கான அதரவுக்கரம் நீட்டப்பட்டது. பல்வேறு நிறுவனங்கள் உலகெங்கிலும் இருந்து பொஸ்னிய ஆவணங்களைச் சேகரிக்கும் இயக்கத்தை ஸ்தாபித்தார்கள். அத்துடன் இலங்கை போலவே பொஸ்னிய-சேர்பிய தகராறும் உலக அரங்கில் வெளிச்சத்துக்கு வந்தது.

2000 மார்ச் 9ம் திகதி, கியுபாவின் நூலகங்களின் நண்பர்கள் என்ற அமைப்பு வெளியிட்ட ஒரு அறிக்கையில், ஸ்பெயின் அரசு கலாச்சார உதவித் திட்டத்தின் கீழ் கியுபா அரசுக்கென அன்பளிப்புச் செய்த நூற்றுக்கணக்கான நூல்கள் கொண்ட பொதிகள் எரிக்கப்பட்டு, புதைக்கப்பட்டு மறைக்கப்பட்டு விட்டதாகக் குற்றஞ்சாட்டி உள்ளது. கியுபாவின் மோசமான தணிக்கை விதிகளை அறிந்திராத வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் அனுப்பும் நல்லெண்ண உதவிகள் எதுவும் கியுபாவின் நூலகங்களை பெரும்பாலும் அடைவதே இல்லை என்பதை இந்த அமைப்பக்கள் அறிவதில்லை. இப்படி அழிக்கப்படும் நூல்களில் அரசியல் சித்தாந்தங்களையோ, சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களையோ பிரதி பலிக்காத சாதாரண அறிவியல் நூல்களும் சிறுவர் நூல்களும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சல்மான் ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்ததும் ஈரானிய கொமெய்னிகளின் திட்டம் பலித்ததோ என்னவோ ருஷ்டியின் நாவல்கள் உலக அரங்கில் விறுவிறுப்பாக விலை போயின. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டியின் கதையாக முடிந்த வரலாறு இது மட்டுமல்ல.

ஜே.கே. ரோலிங் இன் சிறுவர் நாவலான ஹரிபொட்டர் (Harry Potter and the Sorcerer's Stone ) 1999-2000 இல் சினிமாவாக்கப்பட்டு வெளி வந்ததும், சில கிறிஸ்தவர்கள் பாதிரியார் Jack D Brock என்பவரின் தலைமையில் நியு மெக்சிக்கோவின் கிறிஸ்தவ சமூக தேவாலயமான அலாமொ கோர்டோ தேவாலயத்தில் திரண்டெழுந்தனர். அந்த நூல் மாந்திரீக மாயா ஜாலங்களுக்கு எதிரான கிறிஸ்தவ இறையியலின் நம்பிக்கையை கேலிக்கு உள்ளாக்குகின்றதென்பது அவர்களது குற்றச்சாட்டு. இதன் வெளிப்பாடாக அந்த நூலின் பிரதிகளை ஆலயத்தின் உறுப்பினர்கள் எரித்து அழித்தார்கள். விளைவு ஜே.கே.ரோலிங்கை கண்டு கொள்ளாதவர்கள் எல்லாம் அவரது நூல்களைப் பற்றிய தேடலில் தம்மை ஈடுபடுத்தினர். விளைவு? வறுமையில் உழன்ற அவரை இன்று உலகின் பெரும் பணக்காரர்களின் வரிசையில் வரலாறு இடம்பெற வைத்துள்ளது.

நூல்களையோ நூலகங்களையோ தற்காலிகமாக புவியியல் வரையறைக்கும் அதிகார வரம்புக்கும் உள்ளே வைத்து அழிக்கலாம். ஆனால் நவீன →



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரித்தானிய உள்துறை அமைச்சு V தமிழர் தகவல் நடுவம்



வி சிவலிங்கம்

பிரித்தானியாவில் வாழும் குறிப்பிட்ட இனக் குழுமத்தைச் சார்ந்தவர்களில் பலர் நாட்டின் குடிவரவுச் சட்டத்தினை மீறுவதாக, அல்லது மீற முயற்சிப்பதாக இரகசியப் பொலீசாரின் தகவல்கள் தெரிவிப்பின் அல்லது புள்ளி விபரங்கள் தெரிவிப்பின் அவ்வாறான இனக் குழுமத்தைச் சார்ந்த ஒவ்வொருவரினதும் சகல விபரங்களும் அதே பிரச்சினையுள்ள இன்னொரு இனக் குழமத்தைச் சேர்ந்தவரை விட மிகவும் கடுமையாகப் பரிசீலிக்கப்பட வேண்டுமெனவும், தடுப்புக் காவலில் வைத்தல் அல்லது மேலதிக தகவல்கள் திரட்டப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதன் அடிப்படையில் அவ்வினத்தவர்களின் தஞ்ச விண்ணப்பங்களையும் கடுமையாகப் பரிசீலனை செய்ய அதிகாரம் உள்ளதாக அச் சட்டம் கூறுகிறது.

இவ்வாறான பிரித்தானியாவில் வாழும் வேற்று நாட்டின் இனக் குழுமத்தைச் சேர்ந்த ஒருவரை நாட்டிற்குள் நுழையாது தடுக்கவும், அல்லது அவரின் பயணங்களுக்கான தடைகளைப் போடவும், அல்லது தற்காலிகமாக நாட்டிற்குள் அனுமதிப்பதைத் தடுக்கவும் குடிவரவு அதிகாரிக்கு உரிமையை பிரித்தானிய அரசின் இன உறவுகளுக்கான திருத்தச் சட்டம் 2000 வழங்கி இருந்தது. இச்சட்டம் ஏப்ரல் 2001ல் இருந்து அமுலுக்கு வந்து உள்ளது. இச்சட்டத்தின் அடிப்படையில் ஓர் குறிப்பிட்ட இனக் குழுமத்தைச் சேர்ந்தவர் சிறிய குற்றத்திற்கும் பாரதூரமாகத் தண்டிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இச்சட்டத் திருத்தம் மிகவும் பாரபட்சமானது. குறிப்பாக ஒரு மனிதனின் இனக் குழுமத்தினை அடிப்படையாக வைத்து பாகுபாடு காட்டப்படுவதாக பிரித்தானியாவில் தமிழர்களின் நலன் கருதி நீண்ட காலமாக செயற்பட்டு வரும் தமிழ் தகவல் நடுவம் அரசுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தது.

பிரித்தானிய உள்நாட்டமைச்சருக்கு இச் சட்டத் திருத்தம் இரு அதிகாரங்களை வழங்கி உள்ளது. ஒன்று இனக்குழுமத்தை அடையாளப்படுத்தாமல் அல்லது பட்டியல் படுத்தாமல் பாரபட்சம் காட்டுவது. இரண்டாவது பிரச்சனையானவர்கள் என சில இனங்களை அடையாளபடப்படுத்தி அந்த இனக் குழமங்களுக்கு இனப் பாரபட்சம் காட்டுவது. குறிப்பாக 7 இனக் குழுமத்தைச் (தமிழர், குர்திஷ், பொன்ரிஷ் கிரேக்கர், செக் நாட்டைச் சேர்ந்த றோமா, சோமாலியர், அல்பேனியர், ஆப்கானிஸ்தானியர்) சார்ந்தவர்கள் மேல் அமைச்சர் இவ்வகையான பாரபட்சமான அதிகாரத்தைப் பிரயோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் ஏழு இனக் குழுமத்ததைச் சார்ந்தவர்கள் பிரித்தானியாவிற்குள் நுழைவதைத் தடுக்கும் அதிகாரம் குடிவரவு அதிகாரிகளுக்கு அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களைக் கடுமையாக சோதனை செய்யவும், தடுப்புக் காவலில் வைத்து மேலதிக சோதனைகளை மேற்கொள்ளவும். நாட்டுக்குள் நுழையும் அனுமதியை மறுக்கவும் அவ்வாறு அனுமதிக்கும் பட்சத்தில் அதிகளவு கட்டுப்பாடுகளை விதிக்கவும் அதிகாரம் உண்டு.

அடிப்படை மனித உரிமைகளை மீறும் இச் சட்டத்தினை எதிர்த்து தமிழ் தகவல் நடுவம் தாக்கல் செய்த வழக்கிற்கு பிரித்தானியாவில் மனித உரிமை வழக்குகளில் மிகப் பிரபலம் வாய்ந்த Winstanley - Burgess என்ற சட்ட நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் ஆஜராகியது.

தமிழ் தகவல் நடுவத்தினால் தொடுக்கப்பட்ட இவ்வழக்கு எதிர்வரும் யூன் 12/13 ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ் விசாரணை நடைபெறுவதற்கு முன்னரேயே 7 நாடுகளின் பட்டியலிலிருந்து தமிழர்களின் பெயரை நீக்க உள்துறை அமைச்சு சம்மதம் தெரிவித்து உள்ளது. இவ்வாறான சட்டரீதியான பாரபட்ச நிலமைகளுக்கு எதிராக போராடும் TIC போன்ற அமைப்புகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

---

→ ஊடக வளர்ச்சி மிக்க இந்நாளில் தொடர்ந்தும் எவ்வளவு காலத்துக்குத் தான் இத்தகைய அநாகரீக முறைகளை அதிகாரவர்க்கம் பின்பற்றப் போகின்றது? தாங்கள் விரும்பாத பக்கங்களை கிழித்தெடுத்து அழிப்பதன் மூலம் வரலாற்றை ஒரு சிலரின் பார்வையில் இருந்து சில காலங்களுக்கு அப்புறப்படுத்தலாம். அதுவே முழு உலகின் பார்வையையும் அந்தக் கிழிந்த பக்கங்களின்பால் பின்னர் தீவிரமாகச் செலுத்த உதவும் என்பதை அதிகார வர்க்கம் உணரவில்லையா என்ன?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நூல்தேட்டம்

என் செல்வராஜா

## 36. நடனசாரம்



ஆசிரியர்:
லீலாம்பிகை செல்வராஜா
வெளியீடும் பதிப்பும்: F 34
Government Flats, St. Antony's
Mawathe, Kollupittiya,
Colombo 3, Sri Lanka
முதலாவது பதிப்பு - ஜனவரி 01
பக்கம்: 205 பக்கம்,
விலை: 470 ரூபா - US $25

கலாஷேத்திர மரபில் வாழும் ஒரு மாணவியின் உணர்விலும் அறிவிலும் ஊறிப்போயிருக்கும் பரதம் பற்றிய தரவுகள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளது. பரதக்கலையின் வரலாற்றுப் பின்னணி, நடனத் தத்துவங்கள், பரதநாட்டியம் தொடர்பாக எழுந்த நூல்கள், பரத நாட்டியத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த கலைஞர்கள் என நடனக்கலை பற்றிப் பல்வேறு அம்சங்களையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

## 37. ஈழத்து இடப்பெயர் ஆய்வு: யாழ்ப்பாண மாவட்டம்



ஆசிரியர்: இ.பாலசுந்தரம்
வெளியீடும் பதிப்பும்:தமிழர்
செந்தாமரை வெளியீட்டகம்,
ரொறன்ரோ
விவேகா அச்சகம், ரொறன்ரோ
முதலாவது பதிப்பு - ஏப்ரல் 02
பக்கம், அளவு: 447 பக்கம்,
14.5x21 சமீ.

நூலாசிரியர் ஆசிரியர் யாழ் மாவட்ட இடப்பெயர் ஆய்வினை விரிவாக ஆராய்ந்துள்ளார். இந் நூலின் சில பாகங்கள் இடப்பெயர் ஆய்வு: காங்கேசன் கல்வி வட்டாரம் (1988), வடமராட்சி தென்மராட்சிக்கான இடப்பெயர் ஆய்வு(1989) யாழ்ப்பாணத்தில் வெளிவந்து மிகுந்த பாராட்டைப் பெற்றிருந்தது. இத்தொகுதியில் இவ்விரு பாகங்கள் உள்ளிட்ட ஆசிரியரின் முழுமையான ஆய்வும் அடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## 38. தீவகத்து ஊமைகள்




ஆசிரியர்: சு. முரளிதரன்
வெளியீடும் பதிப்பும்:
மலையக வெளியீட்டகம்
தபால் பெட்டி இல 32, கண்டி
முதலாவது பதிப்பு - டிசம்பர் 01
பக்கம்: 40 பக்கம்
விலை: 55 ரூபா

தீவக்த்து ஊமைகள் என்ற இந்த நூலும் ஒரு கவிதைத் தொகுப்புத்தான். கவிஞர் முரளிதரனின் கவிதைகள் காலத்தின் குரல்களாக ஒலிக்கின்றன. மலையக மண்ணின் ஏக்கங்கள் கவிதையாகியுள்ளன. முரளிதரனின் ஆழமான சமூகப் பார்வையும் அறிவார்ந்த கலைத் திறனும் பக்கங்கள் தோறும் மணக்கின்றன. இதில் இடம்பெற்றுள்ள கவிதைகள் தாயகத்திலும் புகலிடத்திலும் காலத்துக்குக்காலம் வெளியானவை.

## 39. மண்ணில் தெரியுது வானம்




தொகுப்பு: ஆர் பத்மநாப ஐயர்
வெளியீடு: Tamil Welfare Association (Newham) UK - TWAN, 602 Romford Rd, E12 5AF, London, UK
விடியல் பதிப்பகம்
11, Periyar Nagar,
Masakklipalayam (North),
Coimbatore, 641 015
அச்சுப் பதிப்பு: Mani Offset,
Chennai - 5
பக்கம்: 520, விலை: £10

கண்ணில் தெரியுது வானம் என்ற நூல் தமிழர் நலன்புரி நிலையத்தின் 5வது ஆண்டு மலராகும். இந்த இதழ் அனைத்துலகத் தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்களின் 91 படைப்புக்களின் தொகுப்பாக மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு உள்ளது. உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் 50க்கும் மேற்பட்ட படைப்புகள் தொகுக்கப்பட்டு உள்ளது. தொகுப்பின் முதற் தொகுப்பு 1996ல் வெளிவந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பிற்பகல் நிகழ்வில் நூலகர் என் செல்வராஜாவின் 1,000 நூல்களின் தொகுப்பான நூல்தேட்டம் வெளியிடப்பட்டது. அதனை அப்பால் தமிழ் இணையத்தள சஞ்சிகையின் ஆசிரியர் கி பி அரவிந்தன் அறிமுகப்படுத்தி வைத்தார். இவர் தேசம் சஞ்சிகையின் ஆய்வையும் மேற்கொண்டார். நூல்தேட்டத்தினை மு நித்தியானந்தன் ஆய்வு செய்தார்.

அடுத்து கருணாணந்தராஜாவின் குயில் பாட்டின் தத்துவ மர்மங்கள் நூலை பேராசிரியர் கோபன் மகாதேவா அறிமுகப்படுத்தி வைக்க அ சிவபாதசுந்தரம், வித்துவான் வேலன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.



இறுதியாக அப்பால் தமிழ், தேசம் ஆகிய சஞ்சிகைகள் எஸ் எம் கோபாலரட்ணத்தால் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. அப்பால் தமிழை ஆய்வியலுக்கு புதியவரான ரி சோதிலிங்கம் ஆய்வு செய்து அனைவரது பாராட்டையும் பெற்றார்.





18 மே 02ல் கண்ணில் தெரியுது வானம் நூல் அறிமுக விழாவில் கலந்து கொண்ட ஆய்வுக் குழு. (இடம் இருந்து வலமாக) மாதவி சிவலீலன், கொ றொ கொன்ஸ்ரன்ரைன், கலாநிதி நா கண்ணன், தலைமையேற்ற மு புஷ்பராஜன்





**தமிழர் தகவல் நடுவம் நடாத்தும்**
**புலம்பெயர்ந்த தமிழர்கள் எதிர்நோக்கும்**

# சமூகப் பிரச்சினைகள்

(அரசியல் தஞ்சம், வன்முறை)

**கலந்துரையாடல்**

**7 யூலை 2002**
**மாலை 3:00 - 6:00**

Tamil Information Centre
Thamil House
720 Romford Rd
London E12
Tel 020 8514 6390


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கிய நிகழ்வு



யாழ் நூலகம் எரிக்கப்பட்ட 21ம் ஆண்டு நிறைவு நாளான யூன் மாதம் 1 ம் திகதி கிழக்கு இலண்டன் ஸ்ரட்பேர்டில் தேசம் சஞ்சிகை ஒரு இலக்கிய நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தது. அறுபதுக்கும் மேற்பட்ட இலக்கிய ஆர்வலர்கள் கலைஞர்கள் கலந்து கொண்ட அவ்விழாவை ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர் எஸ் எம் கோபாலரட்ணம் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.



இரு அமர்வுகளாக இடம்பெற்ற இவ்விழாவில் காலையில் தேசம் ஆதரவில் இடம்பெற்ற பயிற்சிப் பட்டறையில் தயாரிக்கப்பட்ட மட்டை, எதிர்பார்ப்புகள் ஆகிய குறும்படங்கள் காண்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அப்பயிற்சிப் பட்டறை மாணவர்களினால் அமைக்கப்பட்ட ஐரோப்பிய திரைப்படக் கழகத்தினால் தயாரிக்கப்பட்ட அலைகள் குறும் படம் காண்பிக்கப்பட்டது.



அதனை அடுத்து கீர்த்தி சினி ஆர்ட்ஸ் தயாரித்த முழு நீளப்படமான இரகசிய சிநேகம் (Secert Love) படத்தின் பாடல் காட்சிகள் காண்பிக்கப்பட்டது. மிக விரைவில் திரைக்கு வர உள்ள இப் படம் அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதனை அடுத்து காலை அமர்வின் இறுதிக் கட்டமாக எஸ் எம் கோபாலரட்ணம் தனது 50 ஆண்டு கால பத்திரிகைத்துறை அனுபவங்களை சபையோருடன் பகிர்ந்து கொண்டார்.

(மறு பக்கம் பார்க்க)

**புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் சமூக, கலாச்சார, அரசியல், பொருளாதார விடயங்களைத் தாங்கி வரும்**

# தேசம்